மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# திருவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5475

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# திருவாசகம்

அமரர் திருமதி. சி. நாகம்மா அம்மையார்
ஞாபகார்த்த வெளியீடு


விளானை, காரைநகர்.
24-02-1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சிவபுராணம் | ...... | 1 |
| 2. | கீர்த்தித்திருவகவல் | ...... | 5 |
| 3. | திருவண்டப்பகுதி | ...... | 11 |
| 4. | போற்றித் திருஅகவல் | ...... | 18 |
| 5. | திருச்சதகம் | ...... | 26 |
| 6. | நீத்தல் விண்ணப்பம் | ...... | 55 |
| 7. | திருவெம்பாவை | ...... | 68 |
| 8. | திருஅம்மானை | ...... | 74 |
| 9. | திருப்பொற்சுண்ணம் | ...... | 79 |
| 10. | திருக்கோத்தும்பி | ...... | 85 |
| 11. | திருத்தெள்ளேணம் | ...... | 88 |
| 12. | திருச்சாழல் | ...... | 91 |
| 13. | திருப்பூவல்லி | ...... | 94 |
| 14. | திருவுந்தியார் | ...... | 97 |
| 15. | திருத்தோள் நோக்கம் | ...... | 100 |
| 16. | திருப்பொன்னூசல் | ...... | 103 |
| 17. | அன்னைப்பத்து | ...... | 105 |
| 18. | குயிற்பத்து | ...... | 107 |
| 19. | திருத்தசாங்கம் | ...... | 109 |
| 20. | திருப்பள்ளியெழுச்சி | ...... | 111 |
| 21. | கோயில் மூத்த திருப்பதிகம் | ...... | 114 |
| 22. | கோயில் திருப்பதிகம் | ...... | 117 |
| 23. | செத்திலாப்பத்து | ...... | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 24. | அடைக்கலப்பத்து | ...... | 123 |
| 25. | ஆசைப்பத்து | ...... | 126 |
| 26. | அதிசயப்பத்து | ...... | 129 |
| 27. | புணர்ச்சிப்பத்து | ...... | 132 |
| 28. | வாழாப்பத்து | ...... | 135 |
| 29. | அருட்பத்து | ...... | 138 |
| 30. | திருக்கழுக்குன்றப் பதிகம் | ...... | 141 |
| 31. | கண்ட பத்து | ...... | 143 |
| 32. | பிரார்த்தனைப் பத்து | ...... | 145 |
| 33. | குழைத்த பத்து | ...... | 148 |
| 34. | உயிருண்ணிப் பத்து | ...... | 151 |
| 35. | அச்சப் பத்து | ...... | 154 |
| 36. | திருப்பாண்டிப் பதிகம் | ...... | 157 |
| 37. | பிடித்த பத்து | ...... | 160 |
| 38. | திரு ஏசறவு | ...... | 163 |
| 39. | திருப் புலம்பல் | ...... | 165 |
| 40. | குலாப் பத்து | ...... | 166 |
| 41. | அற்புதப் பத்து | ...... | 168 |
| 42. | சென்னிப் பத்து | ...... | 171 |
| 43. | திருவார்த்தை | ...... | 174 |
| 44. | எண்ணப் பதிகம் | ...... | 177 |
| 45. | யாத்திரைப் பத்து | ...... | 179 |
| 46. | திருப்படை எழுச்சி | ...... | 182 |
| 47. | திருவெண்பா | ...... | 183 |
| 48. | பண்டாய நான்மறை | ...... | 185 |
| 49. | திருப்படை ஆட்சி | ...... | 187 |
| 50. | ஆனந்த மாலை | ...... | 192 |
| 51. | அச்சோப் பதிகம் | ...... | 194 |
| ❊ | பாடல் முதற்குறிப்பு | ...... | 197 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருவாசகப் பெருமை

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்து என்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூ ர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "அற்புதம் விளம்பேனே"

உலகம் உய்வதற்காக உதித்தவர் நம் மணிவாசகப் பெருமானார்.
பிறவிநோய் நீங்கி நாம் பேரின்பம் எய்தற் பொருட்டு,
அவர் எமக்களித்த அருமருந்தே,
**திருவாசகம்.**
திருவாசகத்தை மணிவாசகர் அருளினார் என்பது உலக ஒப்பாசாரம்.
பாடியது அப் பரம்பொருள் என்பதே உண்மைநிலை.
**"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை"**
பரம்பொருள் தன்னைக் கருவியாகக் கொண்டு பாடுவித்தான் என
வாசகரே பேசுகிறார்.
இறையருளால்,
பசு கரணங்களை சிவகரணங்களாக்கும் பாக்கியம் பெற்றார் வாசகர்.
**"கூறும் நாவே முதலாக கூறும் கரணம் எல்லாம் நீ"**
மாற்றம் பெற்ற வாசகரின் சிவ கரணங்களுக்கூடாக வெளிப்பட்ட
சிவவாக்கே,
**திருவாசகம்.**
திருவாசகத்தின் பொருள் உரைக்கும்படி கேட்க, மணிவாசகர்,
தில்லையுள் நடமிடும் தேவனைக்காட்டி,
அங்கெழுந்த பேரொளியில் மறைந்தார் என்பது,
பேசப்படும் வரலாறு.
ஆதலால் தான் திருவாசகம் சிவனெனவே கொள்ளப்படுகின்றது.
அக் கூற்றின் உண்மைத்தன்மையை,
திருவாசகத்தை ஓதுவார் உணர்வர்.
இறைவனைப் போலவே இந்நூலும்,
வழிபடுவார்க்கு வரங்கள் தந்து ஆச்சரியப்படுத்தும்.
ஓத ஓத உள்ளுருக்கும்.
எற்புத்துளைதொறும் இறையருளையேற்றி, நம் நெஞ்சமெனும்,
கல்லைப் பிசைந்து கனியாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்கருணை வெள்ளத்துள் அழுத்தும்.
வினை கடியும்.
உருகாதார் நெஞ்செல்லாம் உருக்கி உணர்வூட்டும்.
பிறவா வரம் அளித்துப் பெற்றி தரும்.
இவ்வுண்மையுணர்ந்து நீங்களும் உயர்வுற,
அன்போடு இவ்வமுதப் படையலை,
தங்கள் முன் வைத்து தாழ்ந்து வணங்குகிறேன்.

❋❋❋❋

முற்பிறவியின் முழு நிறைவால் இப்பிறவியில்,
வாசகரை ஈசனவன் வலிய வந்து ஆட்கொண்டான்.
தக்க, அவ் ஆத்மாவின் தகுதி கண்டு,
"செக்கர் போலும் திருமேனி" எம்பிரான்
மானுட வடிவொடு தேடி வருகின்றான்.
தன் அருட்திறத்தால் "புறம் புறம் திரிந்து" புன்மை தீர்க்கிறான்.
தேவராலும், மூவராலும், அறியொணா அத்தேவதேவன்............
யாவரும் அறிய,
குருந்தின் நீழலில் குருவாய் அமர்ந்து,
பொய் கலைந்து மெய்யுணர்த்தி
"வா" என்று அழைக்கவும்,
போகாத தன் புன்மையை எண்ணி கழிவிரக்கம் மேலிட
வாசகர் கதறிய கதறலே,
**திருவாசகமாயிற்று.**
சிவன் அருட்கனி,
கைக்கெட்டி வாய்க்கெட்டாமல் போன வருத்தம்,
வாசகரின் வார்த்தை தோறும் ஒலிக்கும்.
ஐயன் அழைப்பேற்று மெய்யடியார் உடன் ஏக,
பொய்யும் தானும் புறம் போனதெண்ணி அவர் புலம்புவார்.
**"போனார் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே"**
என்பது அவர் வாக்கு.
எய்திய அப் பேரின்ப நிலை இனி எய்தாமற் போகுமோ?
எனும் ஏக்கத்தில் வாடுவார்.
**"விடையவனே விட்டிடுதி கண்டாய்"** என்ற அவர்தம் கெஞ்சலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினால்,
அனுபூதிச் சுவை நம் அகம் கலக்கும்.
மணிவாசகர் அளவு, இறைவனுடன் உறவு பூண்டார் எவருமிலர்.
வாசகர் தம் வாழ்வும், வாக்கும்,
முழுமையான சரணாகதிக்கு முன்னுதாரணங்கள்.
**"அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்**
**குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ**
**இன்றோர் இடையூறு எனக்குண்டோ?"** - எனும்
வாசகரின் கேள்வியில் இச் சரணாகதி நிலை நன்கு புலனாகும்.
அவ்வுயர் நிலையால் அன்பு மிக,
இறைவனோடு அவர் முட்டி மோதும் பாங்கு இரசிக்கத்தக்கது.
சிவனிடம்,
**"கடவுளே போற்றி என்னை கண்டு கொண்டருளு போற்றி"**
எனக் குழைவார்.
**"உரிப்பிச்சன் தோலுடைப்பிச்சன் நஞ்சூண்பிச்சன் ஊர்ச் சுடுகாட்டு எரிப்பிச்சன்"**
என்று கோவிப்பார்.
**"சிரிப்பிப்பன்"**
என்று மிரட்டுவார்.
**"தந்தது என்தன்னை கொண்டது நின்தன்னை சங்கரா யார்கொலோ சதுரர்"**
எனச் சவால் விடுவார்.
**"குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால் என்தான் கெட்டது?"**
என வாதிடுவார்.
இவையெல்லாம் வாசகரின் நிறையன்புக்காம் அளவுகோல்கள்.
அன்பு செய்தற்காக,
தன் ஆறறிவை ஐந்தறிவாய் ஆக்கும்படி கேட்ட அவர் நிலை ஆச்சரியம் தருவது.
**"குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா! உன் குரை கழற்கே**
**கற்றாவின் மனம் போல கசிந்துருக வேண்டுவனே"**
இஃதெல்லாம் நோக்கியே........
"திருவாசகத்துக்கு உருகாதார் நெஞ்சு
ஒருவாசகத்துக்கும் உருகாது"
என்றனர் ஆன்றோர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் சமய நூற்பரப்பு மிக விரிந்தது.
விரிந்த அப்பரப்பின் விடயங்கள் அனைத்தையும்,
திருவாசகத்துள் அடக்கி அற்புதம் செய்தார் வாசகர்.
இலக்கிய நூற்செய்திகள் அனைத்தும்,
திருக்குறளுள் அடங்குமாற் போல்,
சமய நூற்கருத்துக்கள் அனைத்தும்
திருவாசகத்துள் அடக்கமாம்.
எனவே,
இவ் ஒருநூல்,
நம்சமயக் கருத்து அனைத்தையும் உணர்த்தும்
திருநூல் என உணர்ந்து,
பயன்கொள்வோம்.

❋❋❋❋

தமிழையும் சைவத்தையும் இருகண்ணெனப் போற்றியது நம் யாழ்ப்பாணம்.
ஆன்மீகத்தை தம் வாழ்வின் அடித்தளமாய்க் கொண்ட யாழ்ப்பாணத்தவர்
திருவாசகத்தை உச்சிமேல் வைத்து உவந்தனர்.
இன்றைய நம் சைவவாழ்வின் காவலராம் நாவலர்,
மார்கழி மாதத்தை திருவாசகத்துக்கெனவே வரைவு செய்தனர்.
இன்றும் அவர் கட்டளை நம்மவரால் பேணப்படுகிறது.
அப்பேணுதலின் ஒரு வெளிப்பாடே
இத்திருவாசகப் பதிப்பு.

❋❋❋❋

யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வின்,
அனைத்துப் பண்பாட்டு அம்சங்களையும்,
பொன்னெனப் பொதித்துப் போற்றுவது காரைநகர்.
யாழ்ப்பாணத் தமிழர்தம் வாழ்வின் விழுமியங்களை ஆயப்புகுவார்,
காரைநகர்ப் பெருமக்கள் வாழ்வினுள் மாத்திரமே,
அதன் முழுமை கண்டு மகிழலாம்.
சைவமும் தமிழும் அவை சார்ந்த கலைகளும்,
ஓங்கி அம்மண்ணில் வளரும்.
வளர்க்கும் வள்ளல்களுக்கும்,
அன்றுதொட்டு இன்றுவரை குறைவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் எப்பகுதியிலாயினும் ஓர் தர்ம கைங்கரியம் நிகழுமேல்
அங்கு ஓர் காரைநகர் அன்பர் இருக்கிறார் என அனுமானம் கொண்டே
துணியலாம்.
அவர்கள் மணிவாசகர்தம் அருமை உணர்ந்து,
அவர் பெயரால் சபை அமைத்து,
திருவாகத்தைப் போற்றும் சீராளர்கள்.
அத்தகு காரைநகர் மண்ணில்,
வேரோடிச் செழித்து விருட்சமான வம்சத்தின்
பேரோட நிற்கின்ற பெருந்தகையாய் திகழ்பவர்,
சிதம்பரப்பிள்ளை நேசேந்திரன் அவர்கள்.
அவர்,
தம் குலவிளக்காம் அன்னை நாகம்மா அம்மையார் நினைவாக
இவ் அருவிருந்தைப் படைக்கிறார்.

❋❋❋❋

திருமதி சிதம்பரப்பிள்ளை நாகம்மா அவர்கள்,
தாய்மைப் பண்புகளின் உறைவிடமாய் வாழ்ந்தவர்.
அன்பு, அடக்கம், மற்றவர் வாழ்வில் அக்கறை இவையே
அம்மையார் தம் அடிப்படை வாழ்வு.
தன்னை வெளிப்படுத்தாமல், "உப்பாக" குடும்பத்துள் கரைந்து நின்றவர்.
அவர், பிறர் மனம்நோகப் பேசியதும் இல்லை, வாழ்ந்ததுமில்லை.
அத்தகு உத்தமி.
எண்ணம் போல வாழ்வு அமைய அவர்,
சிதம்பரப்பிள்ளைதம் வாழ்க்கைத்துணையானார்.
அவர்கள் உணர்வின் தூய்மை, உறவாய் விரிய,
நேசேந்திரன், சாரதாமணி எனும் புதல்வரைப் பயந்து பொலிந்தனர்.
இன்று மருமக்கள், பேரர்கள் என அம்மையார்தம் குடும்பம்,
பிஞ்சோடும் பூவோடும் பெருமரமாய் விரிந்து நிற்கிறது.
கிளைகளும் பூக்களும் கனிகளும் இன்று,
தாய்மரத்தின் பிரிவெண்ணிக் கண்ணீரோடு.
இது அன்பின் வெற்றி.
அன்னையின் வெற்றியுமாம்.
அன்புவேறு அன்னைவேறா?
அவ் அன்புத் தாயின் நினைவாய்,
என்புருக்கும் இந்நூலைப் படைத்து மகிழ்கின்றனர் குடும்பத்தார்.
இப்பணியை,
வையம் மகிழ்ந்து வரவேற்கும்.

❋❋❋❋


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அம்மையார்தம் மைந்தன் நேசேந்திரன் மட்டுமன்றி*
*அவர் மருகர் பாலேந்திரனும்*
*நம் கம்பன் கழகத்தின் காவலர்கள் ஆவர்.*
*பெண்கள் பிள்ளைகள் என,*
*அக்குடும்பத்தின் அத்தனை உறுப்பினரும்,*
*தமிழ்ப் பித்தர்கள்.*
*பொருளைவிட அருளைப் போற்றும் புண்ணியர்கள்.*
*அவர்தம் தொடர்பு இவ்வரும் பணி ஆற்றும் வாய்ப்பினை,*
*கம்பன் கழகத்திற்கீந்தது.*
*நன்றியால் நிரம்புகிறேன்.*

❋❋❋❋

*நிறைவாக,*
*இப்பதிப்பினைப்பற்றி ஒருவார்த்தை.*
*பெரும்பாலான திருவாசகப் பதிப்புகள்*
*பாவகை நோக்கியவையாம்.*
*அவை,*
*ஓதுவார்க்குப் பொருள் விளக்கம் தராது இடர்செய்வது உண்மை.*
*சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லும் தேவை நோக்கி*
*இப்பதிப்பில்,*
*பாவடிவில் அக்கறை காட்டாது,*
*பொருள் வெளிப்பாட்டையே முக்கிய நோக்கமாய்க் கொண்டுள்ளோம்.*
*அஃதுணர்ந்து இந்நூலுள் புகுக.*
*நிறைகள் அனைத்தும்*
*மணிவாசகருக்கும் பதிப்பித்தோர்க்கும் உரியவை.*
*குறைகட்கு நானே பொறுப்பாளி.*
*குறைகலைந்து நிறைகொள்ள வேண்டிப் பணிகிறேன்.*

*"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"*

*அன்பன்*
*இ. ஜெயராஜ்*
*கம்பன் கழகம்*
*18-02-99*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" தமிழ் மூதாட்டி ஔவையின் இப் போதனை நான் பாலப் பருவத்தில் கற்றது. கற்கும் காலத்தில் இத் தொடரின் அருமை எனக்குத் தெரியவில்லை. நம்மைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி இம் மண்ணில் பெருமையுற வாழ வைக்கும் பெற்றோரின் பொறுப்பு, எத்தனை பெரியது என்பதை, நாம் பெற்றோராகி அப் பொறுப்புக்களைச் சுமக்கும் போதுதான் உணர்கின்றோம்.

சமூக அந்தஸ்த்தோடு வாழும் இன்றைய என் வாழ்க்கையை நான் பெறுவதற்காக என் பெற்றோர் செய்த தியாகங்களை எண்ணிப் பார்க்கிறேன். என் நெஞ்சம் உருகி கண்கள் நீர் சொரிகின்றன.

நாங்கள் பிள்ளைகளாய்ப் பிறந்தநாள் தொட்டு, தம் வாழ்வின் ஒரு நிமிடத்தைக்கூடத் தங்கள் சந்தோசத்துக்கெனச் செலவழியாமல், எங்கள் சந்தோசத்தையே தங்கள் சந்தோசமாக நினைத்து வாழ்ந்த சுயநலமற்ற அப் பெற்றோரின் தியாக உணர்வை நினைக்க நெஞ்சு உருகுகிறது.

"அன்பே சிவம்" என்ற சைவர்களின் கொள்கை உண்மையாயின், பிள்ளைகளைப் பொறுத்தவரை பெற்றோர்களைவிட வேறு ஒரு தெய்வம் இருக்க நியாயமில்லை. என்றோ படித்த ஔவையின் அறிவுரையின் அருமையை இந்த வயதில் தான் புரிந்து கொள்கிறேன்.

என் பெற்றோர்கள் பெரும் செல்வர்கள் இல்லை. கல்வியறிவும் அவர்களிடம் அதிகமில்லை. எனினும், அவர்கள் எங்களை வளர்த்த பாங்கினை நினைக்க வியப்பாக இருக்கின்றது. வறுமையிலும் செம்மையாக வாழக் கற்றுத் தந்தார்கள். குலப்பெருமையை விட்டுக் கொடுக்காமல் தர்மத்தோடும், தன்மானத்தோடும், தலைநிமிர்வோடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்போடும் மற்றவரை மதித்து வாழும் வாழ்க்கையை அந்நிலையிலும் அவர்கள் எமக்கு ஊட்டியதை நினைத்து ஆச்சரியப்படுகின்றேன்.

இத்தனையையும் கல்வியாலோ, செல்வத்தாலோ அன்றி தம் வாழ்வின் பண்பால் எமக்கு ஊட்டிய தெய்வங்கள் அவர்கள். அவர்கள் வாழ்க்கைத்தரத்தைவிட இன்று எங்கள் வாழ்க்கைத்தரம் எத்தனையோ மடங்கு உயர்ந்திருப்பினும், வருங்காலச் சந்ததியை அவர்களைப் போல் எங்களால் வழிநடத்த முடியுமா என நினைக்க மலைப்பாக இருக்கின்றது.

அத்தகையோரை என் பெற்றோராகப் பெற்றது, நான் முற்பிறவிகளில் செய்த தவப்பயன்.

எனது தாயார் பொறுமையின் சிகரம். இத்தனை ஆண்டுகளில் அவர் அதிர்ந்து பேசியதை நான் ஒருதரம் கூடக் கேட்டதில்லை.

எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட ஏற்ற, இறக்கங்கள் எந்தவகையிலும் எங்களைத் தாக்கவிடாமல் காத்த பொறுமைசாலி. எங்களை நிழல் செய்து காத்த தெய்வ விருட்சம். தான், தன்கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரக்குழந்தைகள் எனும் சிறு வட்டத்துக்குள் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு மகிழ்ந்திருந்த மகராசி. முடியாமல் போய்விட்ட முதுமைக் காலத்திலும் வீட்டின் அழைப்பு மணி ஒலித்தால் தட்டுத்தடுமாறி எழுந்து வந்து, வந்தது மகனா? மகளா? பேரனா? பேத்தியா? என ஏக்கத்தோடு வரவேற்று நிற்கும் "அன்புத்தாய்".

இன்று அத்தாயை இழந்த தவிப்போடு எங்கள் குடும்பம்.

தெய்வமாகிவிட்ட என் தாய், தந்தையரின் வாழ்க்கைத்தடத்தைப் பற்றி வாழ உள்ளம் விளைகின்றது.

அவர்கள் கற்றுத்தந்த பண்பும், தேடித்தந்த சுயநலமற்ற உறவுகளும் துணைநிற்கும் என்ற தெம்பு உறுதி தருகின்றது.

நான் என்ன கைம்மாறு செய்தாலும், என் தாய் செய்த அன்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஈடாகாது என்பதை நான் நன்கு அறிவேன். எனினும், என் தாயின் நினைவாக உலகம் பயனுற ஏதேனும் செய்ய வேண்டும் என மனம் உந்தியது.

அந்த உந்துதலின் விளைவே இத் திருவாசகப் பதிப்பு.

இம் முயற்சிக்கான ஆலோசனையைத் தந்தனர் "கம்பன் கழகத்தார்". அவர்கள் எங்கள் குடும்ப அங்கத்தவர்கள். நன்றி கூறி அவர்களை அன்னியப்படுத்த விரும்பவில்லை.

"பால் நினைந்தூட்டும் தாயாக" இறைவனைப் பார்த்த மணிவாசகரின் திருவாசகத்தைப் படிக்குந் தோறும், தாய் நினைக்கப்படுவாள் அன்றோ? அங்ஙன்ம் தாய்மை நினைக்கப்படும் போதெல்லாம் என் தாயும் நினைக்கப்படுவாள் என்பதில் எனக்கு ஒரு சிறு திருப்தி.

அத்திருப்தியோடு இவ்வரிய நூலை உங்கள் கைகளில் சேர்க்கிறேன்.

இன்ப, துன்பங்களிலெல்லாம் அன்போடு அருகிலிருந்து, துணைசெய்து எங்கள் குடும்ப முன்னேற்றத்தில் தாங்கள் மகிழும் எம் நெஞ்சம் நிறைந்த உற்றார், உறவினர், நண்பர்கள் முன்னிலையில் இந்நூலைப் படைப்பதில் என் நெஞ்சம் நிறைகின்றது.

இந்நூலை ஏற்றுப் பயனடைய வேண்டுமென,
என் சகோதரி, மைத்துனர், மனைவி, மக்கள், மருமக்கள் அனைவர் சார்பாகவும் வேண்டிப்பணிகிறேன்.

நன்றி.

**சி. நேசேந்திரன்**
276, ஸ்ரீ இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை,
கொழும்பு - 13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**திருச்சிற்றம்பலம்**

# திருவாசகம்

## 1. சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணி தன் தாள்வாழ்க
ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண் நுதலான்தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந் தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டவிழ்க்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கீர்த்தித் திருவகவல்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி
எண்இல் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோர் உலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

என்னுடை இருளை ஏறத் துரந்தும்
அடியார் உள்ளத்து அன்பு மீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திரம் அதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்

கல்லாடத்துக் கலந்து இனிது அருளி
நல்லாளோடு நயப்புற எய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பால்மொழி தன்னொடும்
எஞ்சாது ஈண்டும் இன்அருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

விராவு கொங்கை நல்தடம் படிந்தும்
கேவேடர் ஆகிக் கெளிறது படுத்தும்
மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்ற ஐம் முகங்களால் பணித்து அருளியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தம் பாடியில் நான் மறையோன் ஆய்
அந்தமில் ஆரியனாய் அமர்ந்து அருளியும்
வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
நூறுநூறு ஆயிரம் இயல்பினது ஆகி
ஏறுஉடை ஈசன்இப் புவனியை உய்யக்

கூறுஉடை மங்கையும் தானும் வந்தருளிக்
குதிரையைக் கொண்டு குடநாடதன் மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தான் எழுந்தருளியும்
வேலம் புத்தூர் விட்டேறு அருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற்கு ஈந்த விளைவும்
மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி
சொக்கது ஆகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற்கு அளவறி ஒண்ணான்

நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்
ஆண்டு கொண்டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தணன் ஆகி ஆண்டு கொண்டு அருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநல் மாநகர் இருந்து
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்

ஆங்கு அது தன்னில் அடியவட்காகப்
பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசும்
உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவணம் அதனில் பொலிந்து இருந்து அருளித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாதவூரினில் வந்தினிது அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வன் ஆகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

பூவலம் அதனிற் பொலிந்தினிது அருளிப்
பாவ நாசம் ஆக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம் பெற வைத்து
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்
விருந்தினன் ஆகி வெண்காடதனிற்

குருந்தின் கீழ் அன்றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்காய் இருந்தங்கு
அட்ட மாசித்தி அருளிய அதுவும்
வேடுவனாகி வேண்டுருக்கொண்டு
காடது தன்னில் கரந்த கள்ளமும்

மெய்க் காட்டிட்டு வேண்டுருக்கொண்டு
தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்
ஓரி ஊரில் உகந்தினிது அருளிப்
பார் இரும் பாலகன் ஆகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்

தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்
கோவார் கோலம் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவாரூரில்
ஞானம் தன்னை நல்கிய நன்மையும்
இடை மருதுஅதனில் ஈண்ட இருந்து

படிமப் பாதம் வைத்த அப்பரிசும்
ஏகம்பத்தின் இயல்பாய் இருந்து
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்
திருவாஞ்சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகன் ஆகித் திண்சிலை ஏந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழில் அது காட்டியும்
ஐயாறதனிற் சைவன் ஆகியும்

துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்
திருப்பனை ஊரில் விருப்பன் ஆகியும்
கழுமலம் அதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்
புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்

குற்றாலத்துக் குறியாய் இருந்தும்
அந்தமில் பெருமை அழல் உருக் கரந்து
சுந்தர வேடத்து ஒருமுதல் உருவு கொண்டு
இந்திர ஞாலம் போல வந்தருளி
எவ்வெவர் தன்மையும் தன்வயின் படுத்துத்

தானேயாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திரனாகி
அந்தரத்திழிந்து வந் தழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந்தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசது பகரின்
ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந்தன்னை ஒருங்குடன் அறுக்கும்

ஆனந்தம்மே ஆறா அருளியும்
மாதில் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடையாமல் ஆண்டுகொண்டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண்டருளியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாகிய மும்மலம் அறுக்கும்
தூயமேனிச் சுடர் விடு சோதி
காதலனாகிக் கழுநீர் மாலை
ஏல்உடைத்தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற்கு அளவறியாதவன்

பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டுவாரா வழி அருள் புரிபவன்
பாண்டி நாடே பழம் பதி ஆகவும்
பத்திசெய் அடியரைப் பரம் பரத்து உய்ப்பவன்
உத்தர கோச மங்கையூர் ஆகவும்

ஆதி மூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய
தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்
இருள் கடிந்தருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருள் மலையாகவும்
எப்பெருந்தன்மையும் எவ்வெவர் திறமும்

அப் பரிசதனால் ஆண்டுகொண்டு அருளி
நாயினேனை நலம்மலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கு ஒழித்தருளி
அன்றுடன் சென்ற அருள் பெறும் அடியவர்

ஒன்றஒன்ற உடன் கலந்தருளியும்
எய்த வந்திலாதார் எரியிற் பாயவும்
மாலது ஆகி மயக்கம் எய்தியும்
பூதலம் அதனிற் புரண்டு வீழ்ந்தலறியும்
கால்விசைத்தோடி கடல் புகமண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதநாத என்று அழுதரற்றி
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக்கருளிய பரம நாடகவென்று
இதம் சலிப்பெய்த நின்று ஏங்கினர் ஏங்கவும்
எழில் பெறும் இமயத்து இயல்புடை அம்பொன்

பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம் நவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவரோடும்
பொலிதரு புலியூர்ப்புக்கு இனிதருளினன்

ஒலிதரு கைலை உயர் கிழவோனே

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. திருவண்டப்பகுதி

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல் நுழை கதிரின் துன் அணுப்புரையச்

சிறியவாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பேர் ஊழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து

எறியது வளியின்
கொட்கப் பெயர்க்கும் குழகன் முழுவதும்
படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்

கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன் நாள்தொறும்
அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரின் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட

மண்ணில் திண்மை வைத்தோன் என்று
எனைப்பல கோடிஎனைப்பல பிறவும்
அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன் அ·்தான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்நேர் இல்லோன் தானே காண்க

ஏனத் தொல்லெயிறு அணிந்தோன் காண்க
கானப் புலி உரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன் இசை வீணையில் இசைந்தோன் காண்க

அன்னதொன்றவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன் மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க

சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரி பொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க

இணைப்பு அரும் பெருமையில் ஈசன்காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க
யாவரும் பெற உறும் ஈசன் காண்க

தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள் நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க

புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவன் என யானும் தேறினன் காண்க
அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க

பரமானந்தப் பழம் கடல் அதுவே
கருமா முகிலில் தோன்றித்
திரு ஆர் பெருந்துறை வரையில் ஏறித்
திருத் தகு மின் ஒளி திசை திசை விரிய
ஐம்புலப் பந்தனை வாள் அரவு இரிய

வெம்துயர் கோடை மாத்தலை கரப்ப
நீடு எழில் தோன்றி வாள் ஒளி மிளிர
எம்தம் பிறவியில் கோபம் மிகுந்து
முரசு எறிந்து மாப்பெரும் கருணையில் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட

எஞ்சா இன் அருள் நுண் துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளம் திசை திசை தெவிட்ட வரையுறக்
கேதம் குட்டம் கையற ஓங்கி
இருமுச் சமயத்து ஒரு பேய்த் தேரினை
நீர் நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவப் பெரு வாயிடைப் பருகி தளர்வொடும்
அவப்பெரும் தாபம் நீங்காது அசைந்தன
ஆயிடை வானப் பேரி யாற்று அகவயின்
பாய்ந்து எழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்து
சுழித்து எம் பந்தமாக்கரைபொருது அலைத்து இடித்து

ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர் பறித்து எழுந்து
உருவ அருள் நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான் சிறை கட்டி மட்டவிழ்
வெறி மலர்க் குளவாய் கோலி நிறைஅகிழ்

மாப் புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு
தொண்ட உழவர் ஆரத்தந்த
அண்டத்து அரும் பெறல் மேகன் வாழ்க

கரும் பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க்கு அருளும் ஆதி வாழ்க
அச்சம் தவிர்ந்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன் வாழ்க
சூழ் இருள் துன்பம் துடைப்போன் வாழ்க

எய்தினர்க்கு ஆரமுது அளிப்போன் வாழ்க
கூர் இருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேர் அமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க்கு ஏதில் எம் இறைவன் வாழ்க
காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க

நச்சரவு ஆட்டிய நம்பன் போற்றி
பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நால்திசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇ இச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பதம் கடந்த தொல்லோன்
உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
கண்முதல் புலனாற் காட்சியும் இல்லோன்
விண்முதல் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்று உயர்ந்தெங்கும்

ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக்கு எளிவந்தருளி
அழிதரும் ஆக்கை ஒளியச் செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந்து இருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

ஊற்று இருந்து உள்ளம் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்து அலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரதகக்குவா அல் மாமணிப் பிறக்கம்
மின்ஒளி கொண்ட பொன்ஒளி திகழத்

திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்
முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க்கு ஒளித்தும்
மறைத்திறம்நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்

இத்தந்திரத்தில் காண்டும் என்று இருந்தோர்க்கு
அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆண் எனத்தோன்றி அலி எனப்பெயர்ந்து
வாள் நுதல் பெண் என ஒளித்தும் சேண்வயின்

ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும் போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுள் திருத்த ஒளித்தும்
ஒன்றுண்டில்லை என்றறிவு ஒளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிக்கும் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள் தளை இடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற்றொளித்தும்

தன் நேர் இல்லோன் தானே ஆன தன்மை
என் நேர் அனையார் கேட்கவந்து இயம்பி
அறை கூவி ஆட்கொண்டு அருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்
உளையா அன்பு என்புருக ஓலம் இட்டு

அலைகடல் திரையின் ஆர்த்து ஆர்த்து ஓங்கித்
தலை தடுமாறா வீழ்ந்து புரண்டு அலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடம் களிறு ஏற்றாத் தடம் பெரு மதத்தின்

ஆற்றேன் ஆக அவயவம் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில் நகை எரியின்
வீழ்வித்து ஆங்கு அன்று
அருள் பெருந்தீயின் அடியோம் அடிக்குடில்

ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்
தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்
சொல்லுவது அறியேன் வாழிமுறையோ
தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது
தெரியேன் ஆ ஆ செத்தேன் அடியேற்கு

அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழும் தண் பாற்கடல் திரை புரைவித்து
உவாக்கடல் நள்ளும்நீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாய் உடல் அகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதம் ஆன அமுத தாரைகள்
எற்புத் துளை தொறும் ஏற்றினன் உருகுவது

உள்ளம் கொண்டோர் உருச் செய்தாங்கு எனக்கு
அள்ளூறாக்கை அமைத்தனன் - ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறு எனக் கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன் என்னில்
கருணை வான் தேன் கலக்க

அருளொடு பரா அமுது ஆக்கினன்
பிரமன் மால் அறியாப் பெற்றியோனே

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. போற்றித் திரு அகவல்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடியாலே மூவுலகு அளந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றி செய் கதிர் முடித் திரு நெடுமால் அன்று
அடிமுடி அறியும் ஆதரவதனில்

கடு முரண் ஏனமாகி முன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின் எய்த்தும்
ஊழி முதல்வ சயசய என்று
வழுத்தியும் காணா மலரடி இணைகள்
வழுத்துதற்கெளிதாய் வார்கடல் உலகினில்

யானை முதலா எறும்பீறாய
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்

இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசி நிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கி உள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன் பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குரவென்னும் தொல்விடம் பிழைத்தும்

புல் வரம்பாய பலதுறை பிழைத்தும்
தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவிலாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறுவேறு தம் மாயைகள் தொடங்கின

ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்
சுற்றமென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பரமாக வேதியரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரதமாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தம்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாதமென்னும்
சண்ட மாருதம் சுழித்தடித்து ஆர்த்து

உலோகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி
அதிற் பெருமாயை எனைப்பல சூழவும்
தப்பாமே தாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்

தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியேயாகி நல் இடையறா அன்பின்
பசுமரத்தாணி அறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந்து அனுகுலமாய் மெய் விதிர்த்துச்
சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது ஆகக் கோணுதல் இன்றிச்

சதுர் இழந்து அறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசயமாகக்
கற்றா மனம் எனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது
அருபரத்தொருவன் அவனியில் வந்து

குருபரனாகி அருளிய பெருமையைச்
சிறுமையென்றிகழாதே திருவடி இணையைப்
பிறிவினை அறியா நிழலது போல
முன் பின்னாகி முனியாது அத்திசை
என்புநைந்து உருகி நெக்கு நெக்கு ஏங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாத என்றரற்றி
உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண் களி கூர நுண்துளி அரும்பச்

சாயா அன்பினை நாள் தொறும் தழைப்பவர்
தாயேயாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதரவல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி

மின்னார் உருவ விகிர்தா போற்றி
கல் நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்தனக்கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க்கரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரண் உறு நரகிடை
ஆழாமே அருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி

அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மான் நேர் நோக்கி மணாளா போற்றி

வானகத்து அமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
இடை மருது உறையும் எந்தாய் போற்றி

சடை இடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவையாறா போற்றி
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி

ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
பாகம் பெண் உரு ஆனாய் போற்றி
பராய்த் துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங்கு அறியோன் போற்றி

குற்றாலத்து எம் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழ் இரு மூவர்க்கு
அத்திக்கருளிய அரசே போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருளைக்கு அருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் கொளக்கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்று இங்கு அருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

இலங்கு சுடர் எம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநாடு உடைய மன்னே போற்றி
கலைஆர் அரிகேசரியாய் போற்றி

திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

தெரிவரிது ஆகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளானவர்கட்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேராயிரம் உடைப் பெம்மான் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளி அறுகின் தாராய் போற்றி
நீள் ஒளி ஆகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல் வாய்க்கு அருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங் குருவிக்கு அன்று அருளினை போற்றி
இரும் புலன் புலர இசைந்தனை போற்றி

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடு ஈறு ஆனாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி

செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார்மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன்று அறியா நாயேன்
குழைத்த சொல்மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரம் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சய சய போற்றி

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

## 5.1 மெய்உணர்தல்

**திருச்சிற்றம்பலம்**

5. மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்(து)
உன் விரை யார்கழற்(கு) என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்(து) உன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே 1

6. கொள்ளேன் புரந்தரன் மால் அயன்
வாழ்வு குடி கெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்லால்
நரகம் புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது
எங்கள் உத்தமனே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உத்தமன் அத்தன் உடையான்
அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவன்
என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட
ஊரூர் திரிந்தெவரும்
தத்தம் மனத்தன பேச
எஞ்ஞான்று கொல் சாவதுவே 3

8. சாவமுன்னாள் தக்கன் வேள்வித்
தகர்தின்று நஞ்சம் அஞ்சி
ஆவ எந்தாய் என்று அவிதாவிடும்
நம்மவர் அவரே
மூவரென்றே எம்பிரானொடும்
எண்ணி விண்ணாண்டு மண்மேல்
தேவர் என்றே இறுமாந்து
என்ன பாவம் திரிதவரே 4

9. தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு
முட்டாது இறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன்
உனக் கன்பருள்ளாம்
சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்
நின் திருவடிக்காம்
பவமே யருளு கண்டாய்
அடியேற்கு எம்பரம்பரனே 5

10. பரந்து பல் ஆய் மலரிட்டு முட்டாது
அடியே இறைஞ்சி
இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்
என்னும் அன்பருள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே நின்றென்
வார்கழற்கு அன்பெனக்கு
நிரந்தரமாய் அருளாய் நின்னை
ஏத்த முழுவதுமே 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. முழுவதுங் கண்டவனைப் படைத்தான்
முடி சாய்த்து முன்னாள்
செழுமலர் கொண்டு எங்குத் தேட
அப்பாலான் இப்பால் எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடகமாடிக்
கதியிலியாய்
உழுவையின் தோலுடுத்து உன்மத்தம்
மேல் கொண்டு உழிதருமே 7

12. உழிதரு காலும் கனலும் புனலொடு
மண்ணும் விண்ணும்
இழிதரு காலம் எக்காலம்
வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடியேன்
செய்த வல்வினையைக்
கழிதரு காலமுமாய் அவை
காத்தெம்மைக் காப்பவனே 8

13. பவன் எம்பிரான் பனி மாமதிக்
கண்ணி விண்ணோர்பெருமான்
சிவன் எம்பிரான் என்னை ஆண்டுகொண்டான்
என் சிறுமை கண்டும்
அவன் எம்பிரான் என்ன
நானடியேன் என்ன இப்பரிசே
புவன் எம்பிரான் தெரியும்
பரிசாவது இயம்புகவே 9

14. புகவே தகேன் உனக்கு அன்பருள்
யான் என் பொல்லாமணியே
தகவே எனையுனக்கு ஆட்கொண்ட
தன்மை எப்புன்மையரை
மிகவே உயர்த்தி விண்ணோரைப் பணித்தி
அண்ணா அமுதே
நகவே தகும் எம்பிரான் என்னை
நீ செய்த நாடகமே 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2 அறிவுறுத்தல்

**திருச்சிற்றம்பலம்**

15. நாடகத்தால் உன்னடியார்
போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்பு உனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள் எம் உடையானே 11

16. யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக்கு என்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்தும் இரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச்
சிவனே எம்பெருமான் எம்
மானேயுன் அருள் பெறுநாள்
என்றென்றே வருந்துவனே 12

17. வருந்துவன் நின் மலர்ப்பாதம்
அவை காண்பான் நாயடியேன்
இருந்து நல மலர் புனையேன்
ஏத்தேன் நாத்தழும்பேறப்
பொருந்திய பொற்சிலை குனித்தாய்
அருளமுதம் புரியாயேல்
வருந்துவன் நற்றமியேன் மற்றென்னே
நான் ஆமாறே 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. ஆமாறு உன் திருவடிக்கே
அகம் குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன்
புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே 14

19. வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென்று
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே 15

20. வாழ்த்துவதும் வானவர்கள்
தாம் வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
தம்மையெல்லாம் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகரம் முரலுந்
தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப்பறுத்திடுவான்
யானும் உன்னைப் பரவுவனே 16

21. பரவுவார் இமையோர்கள்
பாடுவன நால்வேதம்
குரவு வார்குழல் மடவாள்
கூறுடையாள் ஒருபாகம்
விரவுவார் மெய் அன்பின்
அடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழல் இணைகள்
காண்பாரோ அரியானே 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. அரியானே யாவர்க்கும்
அம்பரவா அம்பலத்து எம்
பெரியானே சிறியேனை
ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன்
வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன் நான் ஆமாறென்
சாவேன் நான் சாவேனே 18

23. வேனில் வேள் மலர்க்கணைக்கும்
வெண்ணகைச் செவ்வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும்
பதைத்து உருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்று உருகப்
புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய் நீ
மாளா வாழ்கின்றாயே 19

24. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே
வல்வினைப்பட(டு)
ஆழ்கின்றாய் ஆழாமற்
காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக்
கடலாய வெள்ளத்தே 20

***திருச்சிற்றம்பலம்***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# 5.3 சுட்டறுத்தல்

**திருச்சிற்றம்பலம்**

25. வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேலாகப்
பதைத்துருகும் அவர் நிற்க என்னையாண்டாய்க்(கு)
உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே 21

26. வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன் நான் என்றுன்னை அறிவித்தென்னை
ஆட்கொண்ட எம்பிரான் ஆனாய்க்கு இரும்பின்பாவை
அனையநான் பாடேன் நின்றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்
முனைவனே முறையோ நான் ஆனவாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயினானே 22

27. ஆயநான் மறையவனும் நீயே ஆதல்
அறிந்து யான் யாவரினுங் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நான் உனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான் நின் பெருமை அன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசுகேனே 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றாம் திருநீறே நிறையப்பூசிப்
போற்றி எம்பெருமானே என்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வனேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னை நீ ஆட்கொண்ட வண்ணந்தானே 24

29. வண்ணந்தான் சேயதன்று வெளிதே அன்று
அநேகன் ஏகன் அணுவணுவில் இறந்தாய் என்றங்கு
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமாறு அறியாத எந்தாய் உன்றன்
வண்ணந்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழி அற்றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்து ஆட்கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக்கேனே 25

30. சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மால் அமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே 26

31. தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன்று இன்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கல்க்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே உய்யுமாறு என்றென்று எண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. கேட்டாரும் அறியாதான் கேடொன்றில்லான்
கிளையில்லான் கேளாதே எல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்டாதன எல்லாங் காட்டிப் பின்னுங்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமற் காத்து ஆட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே 28

33. விச்சைதான் இது ஒப்பது உண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடியனாக்கி
அச்சந் தீர்த்து ஆட்கொண்டான் அமுதமூறி
அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்புகூர
அச்சன் ஆண் பெண் அலி ஆகாசமாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சை மாமலர் புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே 29

34. தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்து காத்தழிக்கும் மற்றை
மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத்து எந்தை
யாவர் கோன் என்னையும் வந்து ஆண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியாரோடும்
மேன்மேலும் குடைந்தாடி ஆடுவோமே 30

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.4 ஆத்தும சுத்தி

**திருச்சிற்றம்பலம்**

35. ஆடுகின்றிலை கூத்துடையான்
கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை
துணையிலி பிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு
அலறிலை செய்வதொன்று அறியேனே 31

36. அறிவிலாத எனைப் புகுந்து ஆண்டுகொண்டு
அறிவதை அருளி மேல்
நெறியெலாம் புலமாக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானைப்
பிறிவிலாத இன்னருள்கள் பெற்றிருந்தும்
மாறாடுதி பிணநெஞ்சே
கிறியெலாம் மிகக்கீழ்ப்படுத்தாய் கெடுத்தாய்
என்னைக் கெடுமாறே 32

37. மாறி நின்றெனைக் கெடக்கிடந்த அனையை எம்
மதியிலி மட நெஞ்சே
தேறுகின்றிலம் இனியுனைச் சிக்கெனச்
சிவனவன் திரள் தோள்மேல்
நீறு நின்றது கண்டனை ஆயினும்
நெக்கில்ல இக்காயம்
கீறுகின்றிலை கெடுவது உன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே 33


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. கிற்றவா மனமே கெடுவாய் உடையான்
அடி நாயேனை
விற்றெலாம் மிக ஆள்வதற்கு உரியவன்
விரைமலர்த் திருப்பாதம்
முற்றிலா இளந்தளிர் பிரிந்திருந்து நீ
உண்டன எல்லாம் முன்
அற்றவாறும் நின்னறிவும் நின்பெருமையும்
அளவறுக் கில்லேனே 34

39. அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான் நம்
களவறுத்து நின்று ஆண்டமை கருத்தினுட்
கசிந்து உணர்ந்திருந்தேயும்
உளகறுத்து உனை நினைந்து உளம் பெருங்களன்
செய்ததும் இலைநெஞ்சே
பளகறுத்து உடையான் கழல் பணிந்திலை
பரகதி புகுவானே 35

40. புகுவதாவதும் போதர வில்லதும்
பொன்னகர் புகப் போதற்(கு)
உகுவதாவதும் எந்தை எம்பிரான் எனை
ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவதாவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால்கட்டி
மிகுவதாவதும் இன்றெனின் மற்று இதற்கு
என் செய்கேன் வினையேனே 36

41. வினை என்போலுடையார் பிறர் ஆருடையான்
அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்பு
அன்று மற்று அதனாலே
முனைவன் பாத நன்மலர் பிரிந்திருந்து நான்
முட்டிலேன் தலை கீறேன்
இனையன் பாவனை இரும்பு கல் மனம் செவி
இன்னதென்று அறியேனே 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. ஏனையாவரும் எய்திடலுற்று மற்று
இன்னதென்று அறியாத
தேனை ஆன்நெயைக் கரும்பினின் தேறலைச்
சிவனை என் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யான் இருந்து ஓம்புகின்றேன்
கெடுவேன் உயிர் ஓயாதே 38

43. ஓய்விலாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த்தாள் தந்து
நாயிலாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னை நன்னெறி காட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்த என்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே 39

44. வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும்
அதுதனை நினையாதே
மானிலாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேனிலாவிய திருவருள் புரிந்த என்
சிவன் நகர் புகப் போகேன்
ஊனிலாவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டு உடுத்து இருந்தேனே 40

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.5 கைம்மாறு கொடுத்தல்

**திருச்சிற்றம்பலம்**

45. இருகை யானையை ஒத்திருந்து என்உளக்
கருவை யான் கண்டிலேன் கண்ட தெய்வமே
வருக என்று பணித்தனை வானுளோர்க்(கு)
ஒருவனே கிற்றிலேன் கிற்பன் உண்ணவே 41

46. உண்டு ஓர் ஒண்பொருள் என்று உணர்வார்க்கு எலாம்
பெண்டிர் ஆண் அலி என்றறி ஒண்கிலை
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்
கண்டும் கண்டிலேன் என்ன கண் மாயமே 42

47. மேலை வானவரும் அறியாததோர்
கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
காலமே உனை என்றுகொல் காண்பதே 43

48. காணலாம் பரமே கட்கு இறந்ததோர்
வாணிலாப் பொருளே இங்கோர் பார்ப்பெனப்
பாணனேன் படிற்று ஆக்கையை விட்டுனைப்
பூணுமாறு அறியேன் புலன் போற்றியே 44

49. போற்றி என்றும் புரண்டும் புகழ்ந்தும் நின்(று)
ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத்தாளுறுங்
கூற்றம் அன்னதொர் கொள்கையென் கொள்கையே 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. கொள்ளுங்கில் எனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறா மலர்க்கொன்றையான்
நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே 46

51. எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய் தம்பிரான் தனக்கு அஃதிலான்
முந்தி என்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தையாலும் அறிவருஞ் செல்வனே 47

52. செல்வம் நல்குரவு இன்றி விண்ணோர் புழுப்
புல்வரம்பு இன்றி யார்க்கும் அரும் பொருள்
எல்லையில் கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வகை மனத்தேன் பட்ட கட்டமே 48

53. கட்டறுத்து எனை ஆண்டு கண்ணார நீ(று)
இட்ட அன்பரொடு யாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறியேனையே 49

54. அறிவனே அமுதே அடிநாயினேன்
அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது
அறிவிலாமை அன்றே கண்டது ஆண்டநாள்
அறிவனோ அல்லனோ அருள் ஈசனே 50

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.6 அநுபோக சுத்தி

**திருச்சிற்றம்பலம்**

55. ஈசனே என் எம்மானே
எந்தை பெருமான் என்பிறவி
நாசனே நான் யாதும் ஒன்றல்லாப்
பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேசனே அம்பலவனே
செய்வதொன்றும் அறியேனே 51

56. செய்வது அறியாச் சிறு நாயேன்
செம் பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும் பேறு அத்தனையும்
பெறுதற்குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டு உடுத்து இங்கு
இருப்பதானேன் போரேறே 52

57. போரேறே நின் பொன்னகர் வாய்
நீ போந்தருளி இருள்நீக்கி
வாரேறு இள மென்முலையாளோடு
உடன் வந்து அருள அருள் பெற்ற
சீரேறு அடியார் நின்பாதஞ்
சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரேறாய் இங்கு உழல்வேனோ
கொடியேன் உயிர்தான் உலவாதே 53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. உலவாக் காலம் தவமெய்தி
உறுப்பும் வெறுத்து இங்கு உனைக்காண்பான்
பல மா முனிவர் நனிவாடப்
பாவியேனைப் பணிகொண்டாய்
மல மாக் குரம்பை இது மாய்க்க
மாட்டேன் மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
என்கொண்டு எழுகேன் எம்மானே 54

59. மானேர் நோக்கி உமையாள்
பங்கா வந்து இங்கு ஆட்கொண்ட
தேனே அமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக்
கூடுவார் நின் கழல் கூட
ஊனார் புழுக் கூடிது காத்து இங்கு
இருப்பதானேன் உடையானே 55

60. உடையானே நின்றனை உள்கி
உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டு இங்கு ஊர்நாயிற்
கடையானேன் நெஞ்சு உருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூடு இதுகாத்து இங்கு
இருப்பதாக முடித்தாயே 56

61. முடித்தவாறும் என்றனக்கே
தக்கதே முன் அடியாரைப்
பிடித்தவாறுஞ் சோராமற்
சோரனேன் இங்கு ஒருத்தி வாய்
துடித்தவாறுந் துகிலிறையே
சோர்ந்தவாறும் முகங்குறுவேர்
பொடித்தவாறும் இவையுணர்ந்து
கேடு என்றனுக்கே சூழ்ந்தேனே 57


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

62. தேனைப் பாலைக் கன்னலின்
தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை
உம்பரானை வம்பனேன்
நான் நின்அடியேன் நீ என்னை
ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே அருளலாந்
தன்மையாம் என் தன்மையே 58

63. தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மையேனை ஆண்டு ஐயா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்குவார் யாரே
என் நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழும் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே 59

64. புகுவேன் எனதே நின்பாதம்
போற்றும் அடியாருள் நின்று
நகுவேன் பண்டு தோள் நோக்கி
நாண மில்லா நாயினேன்
நெகும் அன்பில்லை நினைக்காண
நீ ஆண்டருள அடியேனும்
தகுவனே என் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே 60

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.7 காருணியத்து இரங்கல்

**திருச்சிற்றம்பலம்**

65. தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி 61

66. போற்றி ஓம் நமச்சிவாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய
புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றி ஓம் நமச்சிவாய
புறம் எனைப் போக்கல் கண்டாய்
போற்றி ஓம் நமச்சிவாய
சய சய போற்றி போற்றி 62

67. போற்றி என் போலும் பொய்யர்
தம்மை ஆட்கொள்ளும் வள்ளல்
போற்றி நின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றி நின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவனம் நீர் தீக்
காற்று இயமானன் வானம்
இருசுடர்க் கடவுளானே 63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. கடவுளே போற்றி என்னைக்
கண்டு கொண்டருளு போற்றி
விடவுளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட்டு ஒல்லை
உம்பர் தந்தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி 64

69. சங்கரா போற்றி மற்றோர்
சரண் இலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை ஊர்தி போற்றி
இங்கு இவ்வாழ்வு ஆற்ற கில்லேன்
எம்பிரான் இழித்திட்டேனே 65

70. இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடு இவ்வாழ்வு போற்றி
உம்பர் நாடடு எம்பிரானே 66

71. எம்பிரான் போற்றி வானத்தவர்
அவர் ஏறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை கூற
வெண்ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை
ஆளுடை ஒருவ போற்றி 67


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. ஒருவனே போற்றி ஒப்பில்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருக என்று என்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே 68

73. தீர்ந்த அன்பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப போற்றி
பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டு
அருளிடும் பெருமை போற்றி
வார்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு
அமுதம் ஈ வள்ளல் போற்றி
ஆர்ந்த நின்பாதம் நாயேற்கு
அருளிட வேண்டும் போற்றி 69

74. போற்றி இப்புவனம் நீர் தீக்
காலொடு வானம் ஆனாய்
போற்றி எவ்வுயிர்க்கும் தோற்றம்ஆகி
நீ தோற்றம் இல்லாய்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாய்
ஈறின்மை ஆனாய்
போற்றி ஐம்புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கையானே 70

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.8 ஆனந்தத்து அழுந்தல்

**திருச்சிற்றம்பலம்**

75. புணர்ப்பதொக்க எந்தை என்னை
ஆண்டு பூண நோக்கினாய்
புணர்ப்பதன்றி என்றபோது
நின்னோ என்னோ என் இதாம்
புணர்ப்பதாக அன்றிதாக
அன்புநின் கழற்கணே
புணர்ப்பதாக அங்கணாள
புங்கமான போகமே 71

76. போகம் வேண்டி வேண்டிலேன்
புரந்தராதி இன்பமும்
ஏகநின் கழல் இணை அலாது
இலேன் என் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி அஞ்சலிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை
ஆறதாக ஐயனே 72

77. ஐய நின்னதல்லது இல்லை
மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்கலந்ததல்ல தில்லை
பொய்ம்மையேன் என் எம்பிரான்
மைகலந்த கண்ணி பங்க
வந்து நின் கழற்கணே
மெய்கலந்த அன்பர் அன்பு
எனக்குமாக வேண்டுமே 73


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. வேண்டும் நின் கழற்கண் அன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயினேனை
ஆவ என்று அருளுநீ
பூண்டு கொண்டு அடியனேனும் போற்றி
போற்றி என்றும் என்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின் வணங்கவே 74

79. வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும்
வேதம் நான்கும் ஓலமிட்டு
உணங்கு நின்னை எய்தலுற்று
மற்றொருண்மை இன்மையின்
வணங்கியாம் விடேங்கள் என்ன
வந்து நின்று அருளுதற்(கு)
இணங்கு கொங்கை மங்கை பங்க
என்கொலோ நினைப்பதே 75

80. நினைப்பதாக சிந்தை செல்லும்
எல்லை ஏய வாக்கினால்
தினைத்தனையும் ஆவதில்லை
சொல்லலாவ கேட்பவே
அனைத்துலகும் ஆய நின்னை
ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்தெனைத்த எப்புறத்த
எந்தை பாதம் எய்தவே 76

81. எய்தலாவ(து) என்று நின்னை
எம்பிரான் இவ் வஞ்சனேற்கு
உய்தலாவ(து) உன்கண் அன்றி
மற்றொருண்மை இன்மையின்
பைதலாவ(து) என்று பாதுகாத்து
இரங்கு பாவியேற்கு
ஈதலாது நின்கண் ஒன்றும்
வண்ணம் இல்லை ஈசனே 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. ஈசனே நீ அல்ல(து) இல்லை
இங்கும் அங்கும் என்பதும்
பேசினேன் ஓர் பேதம் இன்மை
பேதையேன் என் எம்பிரான்
நீசனேனை ஆண்டு கொண்ட
நின்மலா ஓர் நின்னலால்
தேசனே ஓர் தேவருண்மை
சிந்தியாது சிந்தையே 78

83. சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரில் ஐம்புலன்களான்
முந்தையான காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்
வெந்தையா விழுந்திலேன் என்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தையாய நின்னை இன்னம்
எய்தலுற்(று) இருப்பனே 79

84. இருப்பு நெஞ்ச வஞ்சனேனை
ஆண்டு கொண்ட நின்னதாள்
கருப்பு மட்டு வாய் மடுத்(து)
எனைக் கலந்து போகவும்
நெருப்பும் உண்டு யானும் உண்டு
இருந்த(து) உண்ட(து) ஆயினும்
விருப்பும் உண்டு நின்கண் என்கண்
என்பதென்ன விச்சையே 80

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.9 ஆனந்த பரவசம்

**திருச்சிற்றம்பலம்**

85. விச்சுக்கேடு பொய்க்கு ஆகாதென்று இங்கு
எனை வைத்தாய்
இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்துன்
தாள் சேர்ந்தார்
அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன்
ஆரூரெம்
பிச்சைத் தேவா என்னான் செய்கேன்
பேசாயே 81

86. பேசப்பட்டேன் நின்னடியாரில்
திருநீறே
பூசப்பட்டேன் பூதலரால் உன்
அடியான் என்று
ஏசப்பட்டேன் இனிப்படுகின்றது
அமையாதால்
ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன்
அடியேனே 82

87. அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை
ஆட்கொண்டிலை கொல்லோ
அடியாரானார் எல்லாரும்
வந்துன் தாள் சேர்ந்தார்
செடிசேர் உடலம் இது நீக்கமாட்டேன்
எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக்
காணுமாறு காணேனே 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. காணுமாறு காணேன் உன்னை
அந்நாள் கண்டேனும்
பாணே பேசி என்றன்னைப்
படுத்ததென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே
அத்தா செத்தே போயினேன்
ஏண் நாணில்லா நாயினேன்
என் கொண்டு எழுகேன் எம்மானே 84

89. மானேர்நோக்கி உமையாள் பங்கா
மறை ஈறு அறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்கு அரியாய்
சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவமா நகர்குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே 85

90. புறமே போந்தோம் பொய்யும்
யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம்
பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்றொன்று அறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே
நின்தாள் சேர்ந்தாரே 86

91. தாராய் உடையாய் அடியேற்(கு)
உன் தாளிணை அன்பு
பேரா உலகம் புக்கார் அடியார்
புறமே போந்தேன் யான்
ஊர் ஆமிலைக்கக் குருட்டு ஆமிலைத்தாங்(கு)
உன் தாளிணை அன்புக்கு
ஆரா அடியேன் அயலே
மயல் கொண்டு அழுகேனே 87


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

92. அழுகேன் நின்பால் அன்பாம்
மனமாய் அழல் சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார்
பொன்னார் கழல் கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தாரோடும்
தொடராதே
பழுதே பிறந்தேன் என் கொண்டு
உன்னைப் பணிகேனே 88

93. பணிவார் பிணி தீர்த்து அருளிப்
பழைய அடியார்க்கு உன்
அணியார் பாதங் கொடுத்தி
அதுவும் அரிதென்றால்
திணியார் மூங்கில் அனையேன்
வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்து ஒல்லை
தாராய் பொய்தீர் மெய்யானே 89

94. யானேபொய் என்நெஞ்சும்பொய்
என்அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்து உறுமாறே 90

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.10 ஆனந்த அதீதம்

**திருச்சிற்றம்பலம்**

95. மாறிலாத மாக்கருணை வெள்ளமே
வந்து முந்தி நின் மலர்கொள் தாளிணை
வேறிலாப் பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார்
ஈறிலாத நீ எளியையாகி வந்து
ஒளிசெய் மானுடமாக நோக்கியுங்
கீறிலாத நெஞ்சு உடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்டகீழ்மையே 91

96. மையிலங்கு நற்கண்ணி பங்கனே
வந்தெனைப் பணிகொண்டபின் மழக்
கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்
மெய்யிலங்கு வெண்ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யிலங்கு எனைப் புகுதவிட்டு நீ
போவதோ சொலாய் பொருத்தமாவதே 92

97. பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை உண்மையேன்
போத என்று எனைப் புரிந்து நோக்கவும்
வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்
மாண்டிலேன் மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள் செய் அன்பரும்
நீயும் அங்கெழுந்தருளி இங்கெனை
இருத்தினாய் முறையோ என் எம்பிரான்
வம்பனேன் வினைக்(கு) இறுதியில்லையே 93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. இல்லை நின்கழற்(கு) அன்ப(து) என்கணே
ஏலம் ஏலும் நற்குழலி பங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சை கொண்(டு)
என்னை நின்கழற்(கு) அன்பன் ஆக்கினாய்
எல்லையில்லை நின் கருணை எம்பிரான்
ஏது கொண்டு நான் ஏது செய்யினும்
வல்லையே எனக்(கு) இன்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே 94

99. வான நாடரும் அறியொணாத நீ
மறையின் ஈறு முன் தொடரொணாத நீ
ஏனை நாடருந் தெரியொணாத நீ
என்னை இன்னிதாய் ஆண்டுகொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நான் உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத்துடை அவிச்சையே 95

100. விச்ச(து) இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலையனேனை உன் கோயில் வாயிலிற்
பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பருக்(கு)
உரியனாக்கினாய் தாம் வளர்த்த ஓர்
நச்சு மாமரம் ஆயினுங் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே 96

101. உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்(று) எனக்கு ஆவதொன்றினி
உடையனோ பணி போற்றி உம்பரார்
தம் பராபரா போற்றி யாரினுங்
கடையன் ஆயினேன் போற்றி என்பெருங்
கருணையாளனே போற்றி என்னை நின்
அடியனாக்கினாய் போற்றி ஆதியும்
அந்தம் ஆயினாய் போற்றி அப்பனே 97


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102. அப்பனே எனக்(கு) அமுதனே ஆனந்தனே
அகம் நெக அள்ளூறு தேன்
ஒப்பனே உனக்(கு) உரிய அன்பரில்
உரியனாய் உனைப் பருக நின்றதோர்
துப்பனே சுடர் முடியனே துணையாளனே
தொழும்பாளர் எய்ப்பினில்
வைப்பனே எனை வைப்பதோ சொலாய்
நைய வையகத்து எங்கள் மன்னனே 98

103. மன்ன எம்பிரான் வருக என்னெனை
மாலும் நான்முகத்(து) ஒருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
முழுதும் யாவையும் இறுதி உற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்னெனை
பெய் கழற்கண் அன்பாய் என் நாவினாற்
பன்ன எம்பிரான் வருக என்னெனைப்
பாவநாச நின் சீர்கள் பாடவே 99

104. பாடவேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்(து) உருகி நெக்குநெக்கு
ஆடவேண்டும்நான் போற்றி அம்பலத்(து)
ஆடும் நின்கழற் போது நாயினேன்
கூடவேண்டும்நான் போற்றி இப்புழுக்கூடு
நீக்(கு) எனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும்நான் போற்றி வீடுதந்(து)
அருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே 100

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. நீத்தல் விண்ணப்பம்

(உத்தரகோசமங்கையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

105. கடையவனேனைக் கருணையினால்
கலந்(து) ஆண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையனே மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே. 1

106. கொள்ளேர் பிளவு அகலாத் தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதி கண்டாய்
நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறம் அல்லேன் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண்டு
ஆண்ட(து) எக் காரணமே 2

107. காருறு கண்ணியர் ஐம்புலன்
ஆற்றங்கரை மரமாய்
வேருறுவேனை விடுதிகண்டாய்
விளங்குந் திருவா
ரூருறைவாய் மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
வாருறு பூண் முலையாள் பங்க
என்னை வளர்ப்பவனே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108. வளர்கின்ற நின்கருணைக் கையில்
வாங்கவும் நீங்கி இப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய்
வெண் மதிக்கொழுந்(து) ஒன்(று)
ஒளிர்கின்ற நீள் முடி உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
தெளிகின்ற பொன்னும் மின்னும் அன்ன
தோற்றச் செழுஞ்சுடரே 4

109. செழிகின்ற தீப்புகு(ம்) விட்டிலிற்
சின்மொழியாரிற் பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்டாய்
வெறிவாய் அறுகால்
உழுகின்ற பூமுடி உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
வழிநின்று நின்னருள் ஆரமுது
ஊட்ட மறுத்தனனே 5

110. மறுத்தனன் யானுன் அருள்
அறியாமையில் என்மணியே
வெறுத்(து) எனை நீ விட்டிடுதி கண்டாய்
வினையின் தொகுதி
ஒறுத்(து) எனை ஆண்டுகொள் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
பொறுப்பர் அன்றே பெரியோர்
சிறுநாய்கள்தம் பொய்யினையே 6

111. பொய்யவனேன் எனைப் பொருளென
ஆண்டு ஒன்று பொத்திக் கொண்ட
மெய்யவனே விட்டிடுதி கண்டாய்
விடம் உண் மிடற்று
மையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
செய்வனனே சிவனே சிறியேன்
பவந் தீர்ப்பவனே 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. தீர்க்கின்றவாறு என் பிழையை நின்
சீரருள் என்கொல் என்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண்டாய்
விரவார் வெருவ
ஆர்க்கின்ற தார் விடை உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
ஈர்க்கின்ற அஞ்சொ(டு) அச்சம்
வினையேனை இருதலையே 8

113. இருதலைக் கொள்ளியின் உள் எறும்(பு)
ஒத்து நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய்
வியன் மூவுலகுக்(கு)
ஒருதலைவா மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
பொருதலை மூவிலை வேல் வலன்
ஏந்திப் பொலிபவனே 9

114. பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்று
ஆக்கையைப் போக்கப் பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண்டாய்
அளிதேர் விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
வலிநின்ற திண்சிலையால் எரித்தாய்
புரம் மாறுபட்டே 10

115. மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப
யான் உன் மணி மலர்த்தாள்
வேறுபட்டேனை விடுதிகண்டாய்
வினையேன் மனத்தே
ஊறும்மட்டே மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
நீறுபட்டே ஒளி காட்டும்
பொன்மேனி நெடுந்தகையே 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. நெடுந்தகை நீயென்னை ஆட்கொள்ள
யான் ஐம்புலன்கள் கொண்டு
விடுந்தகையேனை விடுதிகண்டாய்
விரவார் வெருவ
அடுந்தகை வேல் வல்ல உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
கடுந்தகையேன் உண்ணும் தெண்ணீர்
அமுதப் பெருங்கடலே 12

117. கடலினுள் நாய்நக்கி ஆங்கு உன்
கருணைக் கடலின் உள்ளம்
விடல் அரியேனை விடுதிகண்டாய்
விடல் இல் அடியார்
உடல் இலமே மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
மடலின் மட்டே மணியே அமுதே
என் மதுவெள்ளமே 13

118. வெள்ளத்துள் நாவற்றி ஆங்கு உன்
அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்
விரும்பும் அடியார்
உள்ளத்(து) உள்ளாய் மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
கள்ளத்துளேற்கு அருளாய்
களியாத களி எனக்கே 14

119. களிவந்த சிந்தையொடு உன்கழல்
கண்டுங் கலந்தருள
வெளிவந்திலேனை விடுதிகண்டாய்
மெய்ச் சுடருக்(கு) எல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
எளிவந்த எந்தைபிரான் என்னை
ஆளுடை என்னப்பனே 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120. என்னை அப்பா அஞ்சல் என்பவர்
இன்றி நின்று எய்த்து அலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய் 16
என் அரும் பொருளே

121. பொருளே தமியேன் புகலிடமே
நின் புகழ் இகழ்வார்
வெருளே எனை விட்டிடுதிகண்டாய்
மெய்ம்மையார் விழுங்கும்
அருளே அணிபொழில் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
இருளே வெளியே இகபரம் ஆகி 17
இருந்தவனே

122. இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னின் அல்லால்
விருந்தினனேனை விடுதிகண்டாய்
மிக்க நஞ்சு அமுதுஆ
அருந்தினனே மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு 18
மடங்கினர்க்கே

123. மடங்க என் வல்வினைக் காட்டை நின்
மன் அருள் தீக்கொளுவும்
விடங்க என்தன்னை விடுதிகண்டாய்
என் பிறவியை வே
ரொடுங் களைந்(து) ஆண்டுகொள் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
கொடுங்கரிக்குன்று உரித்து அஞ்சுவித்தாய் 19
வஞ்சிக் கொம்பினையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

124. கொம்பரில்லாக் கொடி போல்
அலமந்தனன் கோமளமே
வெம்புகின்றேனை விடுதிகண்டாய்
விண்ணர் நண்ணுகில்லா
உம்பர் உள்ளாய் மன்னும் உத்தரகோச
மங்கைக்(கு) அரசே
அம்பரமே நிலனே அனல்
காலொடு அப்பு ஆனவனே 20

125. ஆனை வெம்போரிற் குறுந்தூறு எனப்
புலனால் அலைப்புண்
டேனை எந்தாய் விட்டிடுதிகண்டாய்
வினையேன் மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலையும்
அமுதத்தையும் ஒத்து
ஊனையும் என்பினையும் உருக்கா
நின்ற ஒண்மையனே 21

126. ஒண்மையனே திருநீற்றை
உத்தூளித்(து) ஒளிமிளிரும்
வெண்மையனே விட்டிடுதிகண்டாய்
மெய் அடியவர்கட்(கு)
அண்மையனே என்றும் சேயாய்
பிறர்க்கு அறிதற்(கு) அரிதாம்
பெண்மையனே தொன்மை ஆண்மையனே
அலிட் பெற்றியனே 22

127. பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்கும் அன்பின்
வெற்றடியேனை விடுதிகண்டாய்
விடிலோ கெடுவேன்
மற்றடியேன் தன்னைத் தாங்குநர் இல்லை
என் வாழ்முதலே
உற்றடியேன் மிகத்தேறி நின்றேன்
எனக்கு உள்ளவனே 23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128. உள்ளனவே நிற்க இல்லன
செய்யும் மையல் துழனி
வெள்ளன் அலேனை விடுதிகண்டாய்
வியன் மாத்தடக்கைப்
பொள்ளல் நல்வேழத்து உரியாய்
புலன் நின்கண் போதல் ஒட்டா
மெள்ளெனவே மொய்க்கும் நெய்க்குடந்
தன்னை எறும்பு எனவே 24

129. எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால்
அரிப்புண்டு அலந்த
வெறுந் தமியேனை விடுதிகண்டாய்
வெய்ய கூற்று ஒடுங்க
உறும் கடிப்போது அவையே
உணர்வுற்றவர் உம்பர்உம்பர்
பெறும்பதமே அடியார் பெயராத
பெருமையனே 25

130. பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு
நினைப் பிரிந்த
வெருநீர்மையேனை விடுதிகண்டாய்
வியன் கங்கை பொங்கி
வருநீர் மடுவுள் மலைச் சிறுதோணி
வடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதியும் சடை
வானம் கொழுமணியே 26

131. கொழுமணி ஏர் நகையார் கொங்கைக்
குன்றிடைச் சென்று குன்றி
விழும் அடியேனை விடுதிகண்டாய்
மெய்ம் முழுதும் கம்பித்து
அழும் அடியாரிடை ஆர்த்து வைத்து
ஆட்கொண்டு அருளி என்னைக்
கழுமணியே இன்னும் காட்டுகண்டாய்
நின் புலன் கழலே 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

132. புலன்கள் திகைப்பிக்க யானும்
திகைத்து இங்கு ஓர் பொய்ந் நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதிகண்டாய்
விண்ணும் மண்ணும் எல்லாம்
கலங்க முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்
கருணாகரனே
துலங்குகின்றேன் அடியேன் உடையாய்
என் தொழுகுலமே 28

133. குலம்களைந்தாய் களைந்தாய் என்னைக்
குற்றம் கொற்றச் சிலையாம்
விலங்கல் எந்தாய் விட்டிடுதிகண்டாய்
பொன்னின் மின்னு கொன்றை
அலங்கல் அம்தாமரை மேனி அப்பா
ஒப்பிலாதவனே
மலங்கள் ஐந்தாற் சுழல்வன்
தயிரிற்பொரும் மத்து உறவே 29

134. மத்து உறு தண்தயிரிற் புலன்
தீக்கதுவக் கலங்கி
வித்துறுவேனை விடுதிகண்டாய்
வெள் தலை மிலைச்சிக்
கொத்து உறு போது மிலைந்து
குடர்நெடு மாலை சுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச் செஞ்
சாந்து அணி சச்சையனே 30

135. சச்சையனே மிக்க தண்புனல்
விண் கால் நிலம் நெருப்பாம்
விச்சையனே விட்டிடுதிகண்டாய்
வெளியாய் கரியாய்
பச்சையனே செய்ய மேனியனே
ஒண் பட அரவக்
கச்சையனே கடந்தாய்
தடந்தாள அடற்கரியே 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. அடற்கரி போல் ஐம்புலன்களுக்(கு)
அஞ்சி அழிந்த என்னை
விடற்கு அரியாய் விட்டிடுதிகண்டாய்
விழுத் தொண்டர்க்கு அல்லால்
தொடற்கு அரியாய் சுடர் மாமணியே
சுடு தீச்சுழலக்
கடற்கு அரிதாய் எழு நஞ்சு
அமுது ஆக்கும் கறைக்கண்டனே 32

137. கண்டது செய்து கருணை மட்டுப்
பருகிக் களித்து
மிண்டுகின்றேனை விடுதிகண்டாய்
நின் விரைமலர்த்தாள்
பண்டு தந்தாற் போல் பணித்துப்
பணி செயக் கூவித்து என்னைக்
கொண்டென் எந்தாய் களையாய்
களையாய குதுகுதுப்பே 33

138. குதுகுதுப்பு இன்றி நின்று என் குறிப்பே
செய்து நின் குறிப்பில்
விதுவிதுப்பேனை விடுதிகண்டாய்
விரை ஆர்ந்து இனிய
மதுமதுப் போன்று என்னை வாழைப்
பழத்தின் மனங் கனிவித்து
எதிர்வ(து) எப்போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே 34

139. பரம்பரனே நின் பழ அடியாரொடும்
என் படிறு
விரும்பு அரனே விட்டிடுதிகண்டாய்
மென் முயற் கறையின்
அரும்பு அர நேர்வைத்து அணிந்தாய்
பிறவி ஐவாய் அரவம்
பொரும் பெருமான் வினையேன் மனம்
அஞ்சிப் பொதும்பு உறவே 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. பொதும்பு உறு தீப்போல் புகைந்து எரி
அப்புலன் தீக்கதுவ
வெதும்புறுவேனை விடுதிகண்டாய்
விரை ஆர் நறவம்
ததும்பு மந்தாரத்தில் தாரம் பயின்று
மந்தம் முரல் வண்டு
அதும்பும் கொழுந்தேன் அவிர்சடை
வானத்து அடல் அரைசே 36

141. அரைசே அறியாச் சிறியேன்
பிழைக்கு அஞ்சல் என்னின் அல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண்டாய்
வெண்ணகைக் கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த
திருப்பொற்பதப் புயங்கா
வரை சேர்ந்து அடர்ந்து என்ன வல்வினை
தான்வந்து அடர்வனவே 37

142. அடர்புலனால் நின் பிரிந்து அஞ்சி
அம்சொல் நல்லார் அவர்தம்
விடர்விடலேனை விடுதிகண்டாய்
விரிந்தே எரியும்
சுடர் அனையாய் சுடுகாட்டு அரசே
தொழும்பர்க்கு அமுதே
தொடர்வு அரியாய் தமியேன்
தனிநீக்கும் தனித்துணையே 38

143. தனித்துணை நீ நிற்க யான் தருக்கித்
தலையால் நடந்த
வினைத்துணையேனை விடுதிகண்டாய்
வினையேனுடைய
மனத்துணையே என்றன் வாழ்முதலே
எனக்கு எய்ப்பில் வைப்பே
தினைத்துணையேனும் பொறேன்
துயர் ஆக்கையின் திண்வலையே 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

144. வலைத்தலை மான் அன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்து அலைந்தேனை விடுதிகண்டாய்
வெண்மதியின் ஒற்றைக்
கலைத்தலையாய் கருணாகரனே
கயிலாயம் என்னும்
மலைத்தலைவா மலையாள் மணவாள
என் வாழ்முதலே 40

145. முதலைச் செவ்வாய்ச்சியர் வேட்கை வெந்நீரிற்
கடிப்ப மூழ்கி
விதலைச்செய்வேனை விடுதிகண்டாய்
விடக்க ஊன் மிடைந்த
சிதலைச்செய்காயம் பொறேன் சிவனே
முறையோ முறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கை பங்கா
என் சிவகதியே 41

146. கதி அடியேற்கு உன் கழல்தந்து
அருளவும் ஊன் கழியா
விதி அடியேனை விடுதிகண்டாய்
வெண்தலை முழையிற்
பதி உடை வாள் அரப் பார்த்து
இறை பைத்துச் சுருங்க அஞ்சி
மதி நெடு நீரிற் குளித்து ஒளிக்கும்
சடை மன்னவனே 42

147. மன்னவனே ஒன்றும் மாறு
அறியாச் சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே விட்டிடுதிகண்டாய்
மிக்க வேத மெய்ந்நூல்
சொன்னவனே சொல் கழிந்தவனே
கழியாத் தொழும்பர்
முன்னவனே பின்னும் ஆனவனே
இம் முழுதையுமே 43


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148. முழுது அயில் வேல் கண்ணியர் என்னும்
மூரித்தழல் முழுகும்
விழுது அனையேனை விடுதிகண்டாய்
நின் வெறிமலர்த்தாள்
தொழுது செல் வானத் தொழும்பரில்
கூட்டிடு சோத்தம் எம்பிரான்
பழுது செய்வேனை விடேல் உடையாய்
உன்னைப் பாடுவனே 44

149. பாடிற்றிலேன் பணியேன் மணி
நீ ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதிகண்டாய்
வியந்து ஆங்கு அலறித்
தேடிற்றிலேன் சிவன் எவ்விடத்தான்
எவர் கண்டனர் என்று
ஓடிற்றிலேன் கிடந்து உள்ளுருகேன்
நின்று உழைத்தனனே 45

150. உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்
விழைதருவேனை விடுதிகண்டாய்
விடின் வேலை நஞ்சு உண்
மழைதரு கண்டன் குணம் இலி
மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென்று
அறைவன் பழிப்பினையே 46

151. பழிப்பு இல் நின் பாதப் பழந்தொழும்பு
எய்தி விழப் பழித்து
விழித்திருந்தேனை விடுதிகண்டாய்
வெண் மணிப் பணிலம்
கொழித்து மந்தாரம் மந்தாகினி
நுந்தும் பந்தப் பெருமை
தழிச்சிறைநீரில் பிறைக்கலம்
சேர்தரு தாரவனே 47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. தாரகை போலும் தலைத்
தலைமாலைத் தழல் அரப்பூண்
வீர என்தன்னை விடுதிகண்டாய்
விடில் என்னை மிக்கார்
ஆர் அடியான் என்னின் உத்தரகோச
மங்கைக்(கு) அரசின்
சீர் அடியார் அடியான் என்று
நின்னைச் சிரிப்பிப்பனே 48

153. சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண்டாய்
விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோல் உடைப்பிச்சன் நஞ்சு
ஊண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்
பிச்சன் என்று ஏசுவனே 49

154. ஏசினும் யான் உன்னை ஏத்தினும்
என் பிழைக்கே குழைந்து
வேசறுவேனை விடுதிகண்டாய்
செம்பவள வெற்பின்
தேசுடையாய் என்னை ஆளுடையாய்
சிற்றுயிர்க்கு இரங்கி
காய்சினம் ஆலம் உண்டாய் அமுது
உண்ணக் கடையவனே 50

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. திருவெம்பாவை

(திருவண்ணாமலையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

155. ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

156. பாசம் பரஞ்சோதிக்(கு) என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ(து) எப்போ(து) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு(ம்) மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்(கு) அன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

157. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்(து) எதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்(து) ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின்அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158. ஒள் நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ(டு) உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்(று) அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்(கு) ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு) இனியானைப் பாடிக் கசிந்(து) உள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

159. மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்(டு) அருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

160. மானே நீ நென்னலை நாளை வந்(து) உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலைஅளித்(து) ஆட்கொண்டருளும்
வான் வார்கழல் பாடி வந்தோர்க்(கு) உன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

161. அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழு(கு) ஒப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுது என்(று) எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162. கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருட்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈ(து) என்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடலோர் எம்பாவாய். 8

163. முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். 9

164. பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்து அரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

165. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல் போல்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறு மருங்குல்
மை ஆர் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166. ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்(து) ஆடும்
தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார் கலைகள்
ஆர்ப்(பு) அரவம்செய்ய அணிகுழல் மேல் வண்(டு) ஆர்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்(து) உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடேலோர் எம்பாவாய். 12

167. பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குரு(கு) இனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்(று) இசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்(து) ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 13

168. காதார் குழைஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள் பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்(து) எடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

169. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா(து) நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம் ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து) உடையாள்
என்னத் திகழ்ந்(து) எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

171. செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்(கு) ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 17

172. அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 18

173. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்(று) உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா(து) எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்(கு) எங்கோன் நல்குதியேல்
எங்(கு) எழில் என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய். 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

174. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய். 20

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. திரு அம்மானை

(திருவண்ணாமலையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

175. செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்(பு) அறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய் 1

176. பாரார் விசும்(பு) உள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம் புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல் வாய் மீன் விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய் 2

177. இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்(து) உருக்கும் சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண்டான் தந்த
அந்தம் இலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

178. வான்வந்த தேவர்களும் மாலயனோ(டு) இந்திரனும்
கான்நின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலை அளித்திட்டு
ஊன்வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய் 4

179. கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கி தன்கருணை
வெள்ளத்(து) அழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய் 5

180. கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன எல்லாம் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடெய்த
ஆள்தான்கொண்டு ஆண்டவா பாடுதுங்காண் அம்மானாய். 6

181. ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நம் தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய் 7

182. பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்(து) ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

183. துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டம் கரியான் செம்மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுதல் ஆயினான் அந்தமில்லா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க்(கு) ஈந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய் 9

184. விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய் 10

185. செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய் 11

186. மைப்பொலியும் கண்ணி கேள் மாலயனோ(டு) இந்திரனும்
எப்பிறவியும் தேட என்னையும் தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண்(டு) இனிப்பிறவாமே காத்து
மெய்ப் பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய் 12

187. கையார் வளை சிலம்பக் காதார் குழையாட
மையார் குழல் புரளத் தேன் பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ(று) அணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்(கு) அல்லாத வேதியனை
ஐயா(று) அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய் 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188. ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்(து) இறந்(து) எய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பில் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய் 14

189. சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரிந்திட்டு எச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய் 15

190. ஊனாய் உயிராய் உணர்வாய் என் உட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழிஎமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல் உயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். 16

191. சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அன(ல்) ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய் 17

192. கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந்திருந்(து) இரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்(து) என் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய் 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193. முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மா(து) இயலும் பாதியனைத்
தென் ஆனைக்காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட்(கு) இன்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய் 19

194. பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்அடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றி இப்பாசத்தைப் பற்றற நாம் பற்றுவான்
பற்றிய பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய் 20

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. திருப்பொற் சுண்ணம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

195. முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடம் தூபநல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்(டு) இசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 1

196. பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற் திருச்சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்(து) உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம்கோன் எம்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே 2

197. சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர்கோன் அயன் தன்பெருமான்
ஆழியான்நாதன் நல்வேலன் தாதை
எந்தரம்ஆள் உமையாள் கொழுநற்(கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும்நாமே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
PROF. A. SIVASAMY

198. கா(சு) அணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்(பு) அணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 4

199. அறு(கு) எடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோ(டு) அமரர்
நறுமுறு தேவர் கணங்கள்எல்லாம்
நம்மிற் பின்(பு) அல்ல(து) எடுக்க ஒட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற் செவ்வாயினீர் முக்கண் அப்பற்(கு)
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 5

200. உலக்கை பல ஓச்சுவார் பெரியார்
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாள்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்நாமே 6

201. சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந்(து) ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக(ம்) மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

202. வாள் தடங்கண் மட மங்கை நல்லீர்
வரி வளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்கத்
தோள் திருமுண்டம் துதைந்(து) இலங்கச்
சோத்தெம்பிரான் என்று சொல்லிச்சொல்லி
நாள்கொண்ட நாள்மலர்ப் பாதம் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆள்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 8

203. வையகம் எல்லாம் உரல் அதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 9

204. முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய் குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தம் சிவனொடும் ஆடஆடச்
செங் கயற்கண் பனி ஆடஆடப்
பித்(து) எம்பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொடு ஆடஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 10

205. மாடு நகைவாள் நிலா எறிப்ப
வாய் திறந்(து) அம் பவளம் துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத்(து) ஆடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206. மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத்(து) ஆட்கொண்(டு) அருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போது அரிக்கண் இணைப் பொற்றொடித்தோள்
பைஅர(வு) அல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 12

207. மின்னிடைச் செந் துவர் வாய்க் கருங்கண்
வெண்நகைப் பண் அமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற் திருச்சுண்ணம் இடித்தும் நாமே 13

208. சங்கம் அரற்றச் சிலம்(பு) ஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலைஆடச்
செங்கனி வாய் இதழுந் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற் திருச்சுண்ணம் இடித்தும்நாமே 14

209. ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்(கு) அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத்(து) ஆண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும்(பு) ஏற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

210. ஆவகை நாமும் வந்(து) அன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரஞ்செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே 16

211. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடை மேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகமாக நஞ்சுண்டல் பாடிப்
பொற் திருச்சுண்ணம் இடித்தும்நாமே 17

212. அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்(று) உரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடி நின்றாடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே 18

213. வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென்தில்லை பாடிச்
சிற்றம்பலத்(து) எங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

214. வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமுமாய் வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே 20

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. திருக்கோத்தும்பி

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

215. பூ ஏறு கோனும் புரந்தரனும் பொற்(பு) அமைந்த
நா ஏறு செல்வியும் நாரணனும் நான் மறையும்
மா ஏறு சோதியும் வானவரும் தாமறியாச்
சே ஏறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ 1

216. நானார் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை ஆரறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடை தலையில் உண்பலி தேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ 2

217. தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 3

218. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்(து) என்னை வாஎன்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ 4

219. அத்தேவர் தேவர் அவர்தேவர் என்(று) இங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றற நான் பற்றி நின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ 5

220. வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221. சட்டோ நினைக்க மனத்(து) அமுதாம் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ 7

222. ஒன்றாய் முளைத்(து) எழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும் எம்அனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ 8

223. கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு
மரணம் பிறப்(பு) என்ற இவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 9

224. நோயுற்று மூத்து நான் நுந்து கன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ 10

225. வன்னெஞ்சக் கள்வன் மன வலியன் என்னாதே
கல் நெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆண்டு கொண்ட
அன்னம் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னம் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 11

226. நாயேனைத் தன்அடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீஏதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ 12

227. நான் தனக்கு அன்பின்மை நானும் தானும் அறிவோம்
தான் என்னை ஆட்கொண்டது எல்லோரும்தாம் அறிவார்
ஆன கருணையும் அங்கு உற்றே தான்அவனே
கோன் எனைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

228. கருவாய் உலகினுக்கு அப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறை பயில் அந்தணனாய் ஆண்டு கொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ 14

229. நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ் இடத்தோம்
தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மாகடலும் ஆய பிரான்
தேன் உந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ 15

230. உள்ளப் படாத திரு உருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களி வந்த வான்கருணை
வெள்ளப்பிரான் எமபிரான் என்னை வேறே ஆட்
கொள் அப்பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 16

231. பொய்யாய செல்வத்தே புக்கு அழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என்ஆருயிரே அம்பலவா என்(று) அவன்தன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ 17

232. தோலும் துகிலும் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ 18

233. கள்வன் கடியன் கலதி இவன் என்னாதே
வள்ளல் வரவர வந்(து) ஒழிந்தான் என்மனத்தே
உள்ளத்து உறுதுயர் ஒன்றொழியா வண்ணம் எல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 19

234. பூமேல் அயனோடு மாலும் புகல் அரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனியானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 20

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. திருத்தெள்ளேணம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

235. திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடியை
உரு நாம் அறிய ஓர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமில்லாற்(கு) ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 1

236. திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கரு வேரறுத்த பின் யாவரையுங் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆய பிரான் அவன் மருவும்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ 2

237. அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்(து) அன்றி நின்றசிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்(டு) உலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 3

238. அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவ மாயம் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமான ஆ பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 4

239. அருமந்த தேவர் அயன் திருமாற்(கு) அரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்து என் உளம் புகுந்த
திருவந்த ஆ பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 5

240. அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும் வந்து ஆண்டதிறம்
உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு ஆ பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

241. ஆவா அரி அயன் இந்திரன் வானோர்க்(கு) அரியசிவன்
வாவாஎன்(று) என்றனையும் பூதலத்தே வலிந்தாண்டுகொண்டான்
பூவார் அடிச்சுவ(டு) என்தலை மேல் பொறித்தலுமே
தேவான ஆ பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 7

242. கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்பொடு இறப்பென்னும்
அறம்பாவமென்ற இரண்டச்சம் தவிர்த்தென்னை ஆண்டுகொண்டான்
மறந்தேயும் தன்கழல் நான் மறவாவண்ணம் நல்கிய அத்
திறம்பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 8

243. கல்நார் உரித்தென்ன என்னையும் தன் கருணையினால்
பொன்னார் கழல் பணித்(து) ஆண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்(கு) இடைச் செந்துவர் வாய் வெண்நகையீர்
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ 9

244. கனவேயும் தேவர்கள் காண்பரிய கனை கழலோன்
புன(ம்) வேய்அன வளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப் பிடித்(து) ஆட்கொண்ட ஆ நயந்து நெஞ்சம்
சின வேற்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ 10

245. கயல்மாண்ட கண்ணிதன்பங்கன் எனைக்கலந்(து) ஆண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்(டு) என்னுடைய
செயல்மாண்ட ஆ பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 11

246. முத்திக்(கு) உழன்று முனிவர் குழாம் நனிவாட
அத்திக்(கு) அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி
தித்திக்கும் ஆ பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 12

247. பார்பாடும் பாதாளர்பாடும் விண்ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகை அருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப் பெரியோன்
சீர்பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

248. மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்து அடியேன்
பாலே புகுந்து பரிந்(து) உருக்கும் பாவகத்தால்
சேலேர் கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ 14

249. உருகிப் பெருகி உளங்குளிர முகந்து கொண்டு
பருகற்(கு) இனிய பரங்கருணைத் தடங் கடலை
மருவித் திகழ் தென்னன் வார்கழலே நினைந்(து) அடியோம்
திருவைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 15

250. புத்தன் புரந்தராதியர் அயன் மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்(பு) அறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்த ஆ தெள்ளேணம் கொட்டாமோ 16

251. உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடல் உளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழல் இணைகள் தந்து அருளும்
செயலைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 17

252. வான்கெட்டு மாருதம் மாய்ந்(து) அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றிச் சலிப்பு அறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும்போய்
நான்கெட்ட ஆ பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 18

253. விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்து அயன் மால் உடைய வைப்(பு) அடியோம்·
கண் ஆர வந்து நின்றான் கருணைக் கழல் பாடித்
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ 19

254. குலம்பாடிக் கொக்கு இறகும் பாடிக் கோல்வளையாள்
நலம் பாடி நஞ்சுண்ட ஆ பாடி நாள் தோறும்
அலம்பு ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பு ஆடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ 20

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. திருச்சாழல்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

255. பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ 1

256. என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம்பெய் கோவணம் ஆக் கொள்ளுமது என்னேடீ
மன்னு கலை துன்னுபொருள் மறைநான்கே வான் சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ 2

257. கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ 3

258. அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயம் அன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ 4

259. தக்கனையும் எச்சனையும் தலை அறுத்துத் தேவர்கணம்
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்க வந்தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கே மிகைத்தலை மற்றருளினன் காண் சாழலோ 5

260. அலரவனும் மாலவனும் அறியாமே அழல் உருவாய்
நிலமுதற் கீழ் அண்டம் உற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற் கீழ் அண்டம் உற நின்றிலனேல் இருவரும் தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

261. மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன் சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன் சடையிற் பாய்ந்திலனேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ 7

262. கோலாலம் ஆகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்(று) அயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ 8

263. தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ 9

264. தான் அந்தம் இல்லான் தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்(து) அழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்(து) அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்(கு) ஓர் வான்பொருள்காண் சாழலோ 10

265. நங்காய் இதென்ன தவம் நரம்போடு எலும்(பு) அணிந்து
கங்காளம் தோள் மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம்ஆம் ஆகேள் காலாந்தரத்(து) இருவர்
தம் காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ 11

266. கானார் புலித்தோல்உடை தலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்கிங்(கு) ஆட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ 12

267. மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா(து) ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும்காண் சாழலோ 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

268. தேன்புக்க தண்பணை சூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணி எல்லாம்
ஊன்புக்க வேல் காளிக்கு ஊட்டாம்காண் சாழலோ 14

269. கடகரியும் பரிமாவும் தேரும் உகந்(து) ஏறாதே
இடபம் உகந்(து) ஏறியவா எனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ 15

270. நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்(று) ஆலின் கீழிருந்(து) அங்(கு) அறமுரைத்தான் காணேடீ
அன்(று) ஆலின் கீழிருந்(து) அங்(கு) அறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரம் மூன்றும் கூட்டோடே சாழலோ 16

271. அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசா என்(று) ஏத்தினகாண் சாழலோ 17

272. சலமுடைய சலந்தரன் தன் உடல் தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்(கு) அன்(று) அருளியவா(று) என்னேடீ
நலமுடைய நாரணன் தன் நயன(ம்) இடந்(து) அரனடிக்கீழ்
அலராகஇட ஆழி அருளினன்காண் சாழலோ 18

273. அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்(து) அங்(கு) ஏதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ 19

274. அருந்தவருக்(கு) ஆலின் கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக்(கு) அருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக்(கு) அறமுதல்நான்(கு) அன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக்(கு) உலகியற்கை தெரியாகாண் சாழலோ 20

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. திருப்பூவல்லி

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

275. இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்(து) ஒழிந்தேன்
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ 1

276. எந்தை எந்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத்தேன் இருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ 2

277. நாயிற் கடைப்பட்ட நம்மையும் ஓர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதும் தயாஉடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத்(து) ஆண்டான் என் வல்வினையின்
வாயிற் பொடி அட்டிப் பூவல்லி கொய்யாமோ 3

278. பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்து அனல்
விண்பட்ட பூதப்படை வீரபத்திரரால்
புண்பட்ட ஆ பாடிப் பூவல்லி கொய்யாமோ 4

279. தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடி வந்(து) உள் புகுந்தான் உலகர் முன்னே
நானாடி ஆடி நின்றோலமிட நடம் பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ 5

280. எரிமூன்று தேவர்க்கிரங்கி அருள் செய்தருளிச்
சிரமூன்(று) அறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்றும் ஆகி உணர்(வு) அரிதாம் ஒருவனுமே
புரமூன்(று) எரித்தவா பூவல்லி கொய்யாமோ 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281. வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்தவைத்து
இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்(து) எம்பெருமான்
அணங்கொ(டு) அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 7

282. நெறிசெய்(து) அருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழு(து) உடற்றும் பழவினையைக்
கிறிசெய்த ஆ பாடிப் பூவல்லி கொய்யாமோ 8

283. பன்னாள் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்ஆகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கல்நார் உரிதென்னை ஆண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான ஆ பாடிப் பூவல்லி கொய்யாமோ 9

284. பேராசையாம் இந்தப் பிண்ட(ம்) அறப் பெருந்துறையான்
சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்(டு) உகந்த காபாலி
போரார்புரம் பாடிப் பூவல்லி கொய்யாமோ 10

285. பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்க்
கோலம் குளிர்ந்துள்ளம் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ 11

286. வானவன் மாலயன் மற்றும் உள்ள தேவர்கட்கும்
கோனவனாய் நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுது செய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ 12

287. அன்(று) ஆல நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்(று) ஆர ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்தாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288. படமாக என்னுள்ளே தன் இணைப்போ(து) அவையளித்திங்கு
இடமாகக் கொண்டிருந்த ஏகம்பம் மேயபிரான்
தடமார் மதில் தில்லைஅம்பலமே தான் இடமா
நடமாடு ஆ பாடிப் பூவல்லி கொய்யாமோ 14

289. அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன்
செங்கண்அரி அயன் இந்திரனும் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனும் தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 15

290. திண் போர்விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையில் பிட்(டு) அமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 16

291. முன்னாய மாலயனும் வானவரும் தானவரும்
பொன்னார் திருவடி தாம் அறியார் போற்றுவதே
என் ஆகம் உள் புகுந்(து) ஆண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 17

292. சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ 18

293. அத்தி உரித்(து) அது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவு கொண்டு இவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதல் உத்தரகோச மங்கை வள்ளல்
புத்தி புகுந்த ஆ பூவல்லி கொய்யாமோ 19

294. மாஆர ஏறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோ ஆகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல் பரவிப் பூவல்லி கொய்யாமோ 20

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. திருவுந்தியார்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

295. வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா(று) உந்தீபற. 1

296. ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற 2

297. தச்சு விடுத்தலும் தாமடி இட்டலும்
அச்சு முறிந்ததென்(று) உந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற 3

298. உய்யவல்லார் ஒரு மூவரைக் காவல்கொண்(டு)
எய்ய வல்லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென(று) உந்தீபற 4

299. சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய ஆ பாடி உந்தீபற
உருத்திர நாதனுக்கு உந்தீபற 5

300. ஆவா திருமால் அவிப்பாகம் கொண்டன்று
சாவாதிருந்தான் என்(று) உந்தீபற
சதுர்முகன் தாதையென்(று) உந்தீபற 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

301. வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென்(று) உந்தீபற
கலங்கிற்று வேள்வியென்(று) உந்தீபற 7

302. பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென்னேடி உந்தீபற
பணைமுலை பாகனுக்கு உந்தீபற 8

303. புரந்தரனார் ஒரு பூங்குயில் ஆகி
மரந்தனில் ஏறினார் உந்தீபற
வானவர் கோன் என்றே உந்தீபற 9

304. வெஞ்சின வேள்வி வியாத்திரனார் தலை
துஞ்சின ஆ பாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற 10

305. ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய ஆ பாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின்(று) உந்தீபற 11

306. உண்ணப் புகுந்த பகன் ஒளித்தோடாமே
கண்ணைப் பறித்தவா(று) உந்தீபற
கருக்கெட நாமெல்லாம் உந்தீபற 12

307. நாமகள் நாசி சிரம் பிரமன் படச்
சோமன் முகம் நெரித்(து) உந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற 13

308. நான் மறையோனும் மகத்(து) இயமான் படப்
போம்வழி தேடுமா(று) உந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

309. சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரிந்தவா(று) உந்தீபற
மயங்கிற்று வேள்வியென்(று) உந்தீபற 15

310. தக்கனார் அன்றே தலையிழந்தார் தக்கன்
மக்களைச் சூழ நின்(று) உந்தீபற
மடிந்தது வேள்வியென்(று) உந்தீபற 16

311. பாலகனார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற 17

312. நல்ல மலரின்மேல் நான்முகனார் தலை
ஒல்லை அரிந்ததென்(று) உந்தீபற
உகிரால் அரிந்ததென்(று) உந்தீபற 18

313. தேரை நிறுத்தி மலையெடுத்தான் சிரம்
ஈரைந்தும் இற்றவா(று) உந்தீபற
இருபதும் இற்றதென்(று) உந்தீபற 19

314. ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவலென்(று) உந்தீபற
அதற்கப்பாலும் காவலென்(று) உந்தீபற 20

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. திருத்தோள் நோக்கம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

315. பூத்தாரும் பொய்கைப் புனல் இதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ் தில்லைஅம்பலத்தே திருநடம் செய்
கூத்தா உன்சேவடி கூடும்வண்ணம் தோள்நோக்கம் 1

316. என்றும் பிறந்திறந்(து) ஆழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந்தான் பிரமன் காணபரிய
குன்றாத சீர்த் தில்லைஅம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோள்நோக்கம் ஆடாமோ 2

317. பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன் அமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ 3

318. கற்போலும் நெஞ்சம் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போல என்நெஞ்சின் உள்ளே புகுந்தருளி
நற்பால் படுத்தென்னை நாடறியத் தான் இங்ஙன்
சொற்பால(து) ஆனஆ தோள்நோக்கம் ஆடாமோ 4

319. நிலம் நீர் நெருப்(பு) உயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகேழ்எனத் திசைபத்தெனத் தான் ஒருவனுமே
பலஆகி நின்றஆ தோள்நோக்கம் ஆடாமோ 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

320. புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்'
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டு நிற்கச்
சித்தம் சிவம்ஆக்கிச் செய்தனவே தவம் ஆக்கும்
அத்தன் கருணையினால் தோள்நோக்கம் ஆடாமோ 6

321. தீ(து) இல்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாள்இரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோள்நோக்கம் 7

322. மானம் அழிந்தோம் மதி மறந்தோம் மங்கை நல்லீர்
வானம் தொழும் தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகிநின்று ஆடாமோ தோள்நோக்கம் 8

323. எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலை முன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால் பலர் மாண்டனர்காண் தோள்நோக்கம் 9

324. பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக்குறையத்
தங்கண் இடந்(து) அரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம் மாற்(கு) அருளியவாறு
எங்கும் பரவிநாம் தோள்நோக்கம் ஆடாமோ 10

325. காமன்உடல் உயிர்காலன் பல்காய்கதிரோன்
நாமகள்நாசி சிரம்பிரமன் கரம்எரியைச்
சோமன்கலை தலைதக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோள்நோக்கம் ஆடாமோ 11

326. பிரமன் அரியென்(று) இருவரும் தம் பேதைமையால்
பரமம் யாம் பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழல் உருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்ற ஆ தோள்நோக்கம் ஆடாமோ 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

327. ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம் எல்லாம்
பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதல் சிந்தாத நன்மணி வந்(து) என்பிறவித்
தாழைப் பறித்தவா தோள்நோக்கம் ஆடாமோ 13

328. உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்(து) உளம் புகலும்
கரைமாண்ட காமப் பெருங் கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்(து) ஓடத்
துரைமாண்ட ஆ பாடித் தோள்நோக்கம் ஆடாமோ 14

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. திருப்பொன்னூசல்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

329. சீரார் பவளங் கால் முத்தம் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாள் மலர்த்தாள் நாயடியேற்(கு)
ஊராகத் தந்தருளும் உத்தரகோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடிப்
போரார் வேல் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ 1

330. மூன்(று) அங்(கு) இலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித்(து) அமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தரகோசமங்கைக்
கோன்தங்(கு) இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங்(கு) அனநடையீர் பொன்னூசல் ஆடாமோ 2

331. முன்ஈறும் ஆதியும் இல்லான் முனிவர் குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம் நிற்பத்
தன்நீ(று) எனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தரகோசமங்கை
மின்னேறு மாட வியன்மாளிகை பாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ 3

332. நஞ்சமர் கண்டத்தன் அண்டத்தவர் நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தரகோசமங்கை
அஞ்சொலாள் தன்னொடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்(று) அமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

333. ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர் குழாம்
நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தரகோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ 5

334. மாதாடு பாகத்தன் உத்தரகோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருட்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்(டு) என் தொல்பிறவித்
தீதோடா வண்ணம் திகழப் பிறப்பறுப்பான்
காதோடு குண்டலங்கள் பாடிக் கசிந்(து) அன்பால்
போதோடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ 6

335. உன்னற்(கு) அரிய திரு உத்தரகோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்ஒத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ 7

336. கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரி மேற்கொண்டு நமையாண்டான்
சீலம் திகழும் திரு உத்தரகோசமங்கை
மாலுக்(கு) அரியானை வாயார நாம்பாடிப்
பூலித்(து) அகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ 8

337. தெங்குலவு சோலைத் திரு உத்தரகோசமங்கை
தங்குலவு சோதித் தனிஉருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்(டு) எந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ 9

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. அன்னைப் பத்து

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

338. வேதமொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப்பறையினர் அன்னே என்னும்
நாதப்பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர் இந்நாதனார் அன்னே என்னும் 1

339. கண் அஞ்சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின்(று) உருக்குவர் அன்னே என்னும்
உள்நின்(று) உருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும் 2

340. நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்திருப்பரால் அன்னே என்னும்
சித்தத்திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும் 3

341. ஆடரப்பூண் உடைத்தோல் பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா(று) அன்னே என்னும்
வேடம் இருந்த ஆ கண்டு கண்டு என்னுள்ளம்
வாடும் இது என்னே அன்னே என்னும் 4

342. நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டி நல்நாடரால் அன்னே என்னும்
பாண்டி நல்நாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும் 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

343. உன்னற்(கு) அரியசீர் உத்தரமங்கையர்
மன்னுவ(து) என்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ(து) என்நெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும் 6

344. வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரி மேல் கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும் 7

345. தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தம்கையில்
தாளம் இருந்தவா(று) அன்னே என்னும் 8

346. தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும் இதுஎன்னே அன்னே என்னும் 9

347. கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே
இன்றெனக்(கு) ஆனவா(று) அன்னே என்னும் 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. குயிற் பத்து

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

348. கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்(கு) அப்பால்
சோதி மணிமுடி சொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றுமில்லான் அந்தமிலான் வரக் கூவாய் 1

349. ஏர்தரும் ஏழுல(கு) ஏத்த எவ்வுருவும் தன் உருவாய்
ஆர்கலிசூழ் தென்இலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய் 2

350. நீல உருவில் குயிலே நீள்மணி மாடம் நிலாவும்
கோல உருவில் திகழும் கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய திரு உத்தரகோசமங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயகனை வரக் கூவாய் 3

351. தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே இது கேள்நீ
வான்பழித்(து) இம்மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித்(து) உள்ளம் புகுந்தென் உணர்வது ஆய ஒருத்தன்
மான்பழித்(து) ஆண்டமெல் நோக்கி மணாளனை நீவரக் கூவாய் 4

352. சுந்தரத்(து) இன்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்(று) இழிந்திங்கு அடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவும் ஆகிய மூவர் அறியாச்
சிந்துரச் சேவடியானைச் சேவகனை வரக் கூவாய் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

353. இன்பம் தருவன் குயிலே ஏழுலகும் முழு(து) ஆளி
அன்பன் அமுதளித்(து) ஊறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச் சுவடொத்த நற்பரி மேல் வருவானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே கோகழி நாதனைக் கூவாய் 6

354. உன்னை உகப்பன் குயிலே உண்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்த நன்மேனிப் புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன் வரக்கூவாய் 7

355. வா இங்கே நீ குயிற்பிள்ளாய் மாலொடு நான்முகன் தேடி
ஓவி அவர் உன்னி நிற்ப ஒண்தழல் விண்பிளந்தோங்கி
மேவி அன்(று) அண்டம் கடந்து விரிசுடராய் நின்றமெய்யன்
தாவி வரும் பரிப்பாகன் தாழ்சடையோன் வரக்கூவாய் 8

356. காருடைப் பொன் திகழ்மேனிக் கடிபொழில் வாழும் குயிலே
சீருடைச் செங்கமலத்தில் திகழ் உரு ஆகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்தெனை ஆண்ட
ஆருடை அம்பொனின் மேனி அமுதினை நீவரக் கூவாய் 9

357. கொந்(து) அணவும் பொழிற் சோலைக் கூங்குயிலே இது கேள்நீ
அந்தணன்ஆகி வந்(து) இங்கே அழகிய சேவடி காட்டி
எந்தமராம் இவன் என்று இங்(கு) என்னையும் ஆட்கொண்டருளும்
செந்தழல் போல் திருமேனித் தேவர்பிரான் வரக்கூவாய் 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. திருத் தசாங்கம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

358. ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் - ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று 1

359. ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன் நமைஆளுடையான் நாடுரையாய் - காதலவர்க்கு
அன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி 2

360. தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமைஆளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதி என் - கோதாட்டிப்
பத்தர்எல்லாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர் 3

361. செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீ நம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் - தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தம் காணுடையான் ஆறு 4

362. கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய் - நெஞ்சத்து
இருளகல வாள்வீசி இன்பமரும் முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

363. இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே - எப்போதும்
தேன்புரையும் சிந்தையராய்த் தெய்வப்பெண் ஏத்திசைப்ப
வான்புரவி ஊரும் மகிழ்ந்து 6

364. கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய் - ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை 7

365. இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் - அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை 8

366. ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த் தாரென் - தீயவினை
நாளும் அணுகா வண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளி அறுகாம் உவந்த தார் 9

367. சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடிகூறாய் - சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாம் கொடி 10

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. திருப்பள்ளியெழுச்சி

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

368. போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்(கு) இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாய் எனை உடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 1

369. அருணன் இந்திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலர மற்றண்ணல் அம்கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்தமலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே 2

370. கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

371. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்(டு) இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 4

372. பூதங்கள் தோறும் நின்றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 5

373. பப்பற வீட்டிருந்(து) உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத்தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்புறு கமலங்கள் மலருந் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
இப்பிறப்பறுத்(து) எமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 6

374. அதுபழச் சுவைஎன அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருஉரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில் திரு உத்தரகோச
மங்கையுள்ளாய் திருப்பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

375. முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்
பந்தணை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செந்தழல் புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதுங் காட்டி வந்தாண்டாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே. 8

376. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுபொருளே உன தொழுப்படியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும்(பு) அடியார்
எண்ணகத்தாய் உலகுக்குயிர் ஆனாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 9

377. புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறென்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய் திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே. 10

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. கோயில் மூத்த திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

378. உடையாள் உன்றன் நடு இருக்கும்
உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. 1

379. முன் நின்(று) ஆண்டாய் எனை முன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின் நின்(று) ஏவல் செய்கின்றேன்
பிற்பட்டொழிந்தேன் பெம்மானே
என் இன்(று) அருளி வரநின்று
போந்திடென்னாவிடில் அடியார்
உன் நின்(று) இவனார் என்னாரோ
பொன்னம்பலக்கூத்(து) உகந்தானே. 2

380. உகந்தானே அன்புடை அடிமைக்(கு)
உருகா உள்ளத்(து) உணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால்
தக்கவா(று) அன்(று) என்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாராவிடின் முடிவேன்
பொன்னம்பலத்(து) எம் முழுமுதலே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

381. முழுமுதலே ஐம்புலனுக்கும்
மூவர்க்கும் என்தனக்கும்
வழிமுதலே நின் பழவடியார்
திரள் வான் குழுமிக்
கெழுமுதலே அருள் தந்திருக்க
இரங்குங் கொல்லோ என்று
அழும் அதுவே அன்றி மற்(று) என்
செய்கேன் பொன்னம்பலத்தரைசே. 4

382. அரைசே பொன்னம்பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத்(து) இரவுபகல்
ஏசற்றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்(து) உன் அடியேன்பால்
பிரைசேர் பாலில் நெய்போலப்
பேசாதிருந்தால் ஏசாரோ. 5

383. ஏசா நிற்பர் என்னை உனக்(கு)
அடியான் என்று பிறர் எல்லாம்
பேசா நிற்பர் யான் தானும்
பேணா நிற்பேன் நின் அருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்கும்
திருவோலக்கம் சேவிக்க
ஈசா பொன்னம்பலத்தாடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே. 6

384. இரங்கும் நமக்(கு) அம்பலக்கூத்தன்
என்றென்(று) ஏமாந்திருப்பேனை
அருங் கற்பனை கற்பித்(து) ஆண்டாய்
ஆள்வார் இலி மாடாவேனோ
நெருங்கும் அடியார்களும் நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வர எங்கள்
வாழ்வே வா என்றருளாயே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

385. அருளா(து) ஒழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர் இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம்பலக் கூத்தா
மருளார் மனத்தோ(டு) உனைப் பிரிந்து
வருந்துவேனை வாஎன்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ. 8

386. சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்(டு) உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே(று) இருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம்பலத்தாடும்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே. 9

387. நல்கா(து) ஒழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயன நீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா
வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம்பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி
அருளாய் என்னை உடையானே. 10

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. கோயில் திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

388. மாறிநின்(று) என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்(து) அமுதே
ஊறிநின்(று) என்னுள் எழு பரஞ்சோதி
உள்ள ஆ காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1

389. அன்பினால் அடியேன் ஆவியோ(டு) ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற்கில(ன்) ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந்துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத்தரைசே. 2

390. அரைசனேஅன்பர்க்(கு) அடியனேன்உடைய
அப்பனே ஆவியோ(டு) ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்து நின்றுருக்கிப்
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே
திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே
திருப்பெருந்துறை உறை சிவனே
உரை உணர்விறந்து நின்(று) உணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா(று) உணர்த்தே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

391. உணர்ந்த மாமுனிவர் உம்பரோ(டு) ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்பறுக்கும் எம்மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்த தூ வெளியே
திருப்பெருந்துறை உறை சிவனே
குணங்கள்தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்(கு) இனி என்ன குறையே. 4

392. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறை சிவனே
இறைவனே நீ என் உடலிடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே. 5

393. இரந்திரந்(து) உருக என்மனத்(து) உள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியும் கமலச் சேவடிவாய்
திருப்பெருந்துறை உறை சிவனே
நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டு கொண்(டு) இன்றே. 6

394. இன்றெனக்கருளி இருள் கடிந்(து) உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்றுசென்(று) அணுவாய்த் தேய்ந்துதேய்ந்(து) ஒன்றாம்
திருப்பெருந்துறை உறை சிவனே
ஒன்று நீ அல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

395. பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின் அருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாருறவெனக்(கு) இங்கு ஆரயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்கும் என் சோதி. 8

396. சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மாகடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக்(கு) அருளாய்
வந்து நின் இணையடி தந்தே. 9

397. தந்த(து) உன்தன்னைக் கொண்ட(து) என்தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்(று) என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்(கு) இலன்னோர் கைம்மாறே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. செத்திலாப்பத்து

(திருபெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

398. பொய்யனேன் அகம் நெகப் புகுந்(து) அமுதூறும்
புதுமலர்க் கழல் இணையடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்திருந்(து) உள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்தனே அயன் மாற்(கு) அறியொண்ணாச்
செய்ய மேனியனே செய்வகை அறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 1

399. புற்றுமாய் மரமாய்ப் புனல் காலே உண்டியாய்
அண்டவாணரும் பிறரும்
வற்றி யாரும் நின் மலரடி காணா
மன்ன என்னை ஓர் வார்த்தை உட்படுத்துப்
பற்றினாய் பதையேன் மனம் மிக உருகேன்
பரிகிலேன் பரியா உடல்தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரி தருகின்றேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 2

400. புலையனேனையும் பொருளென நினைந்துன்
அருள் புரிந்தனை புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன் விடைப்பாகா
சங்கரா எண்ணில் வானவர்க்(கு) எல்லாம்
நிலையனே அலைநீர் விடம்உண்ட
நித்தனே அடையார் புரம் எரித்த
சிலையனே எனைச் செத்திடப் பணியாய்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

401. அன்பர்ஆகி மற்றருந்தவ(ம்) முயல்வார்
அயனும் மாலு(ம்) மற்றழலுரு மெழுகாம்
என்பராய் நினைவா(ர்) எனைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினும் காண்டாய்
வன்பராய் முருடொக்கும் என் சிந்தை
மரக்கண் என் செவி இரும்பினும் வலிது
தென்பராய்த் துறையாய் சிவலோகா
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 4

402. ஆட்டுத் தேவர்தம் விதி ஒழித்(து) அன்பால்
ஐயனே என்றுன் அருள்வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாதனே உனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவ நின் கழல் இணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர் தம் தேவர் பிரானே
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 5

403. அறுக்கிலேன் உடல் துணிபடத் தீப்புக்கு
ஆர்கிலேன் திருவருள் வகை அறியேன்
பொறுக்கிலேன் உடல் போக்கிடம் காணேன்
போற்றி போற்றி என் போர் விடைப்பாகா
இறக்கிலேன் உனைப் பிரிந்தினி(து) இருக்க
என்செய்கேன் இது செய்க என்றருளாய்
சிறைக்கணே புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 6

404. மாயனே மறிகடல் விட(ம்) உண்ட
வானவா மணிகண்டத்(து) எம் அமுதே
நாயினேன் உனை நினையவும் மாட்டேன்
நமச்சிவாய என்(று) உன் அடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகுலாம் சடைப் பிஞ்ஞகனே ஓ
சேயன் ஆகி நின்(று) அலறுவது அழகோ
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

405. போது சேர் அயன் பொருகடல் கிடந்தோன்
புரந்தராதிகள் நிற்க மற்றென்னைக்
கோது மாட்டி நின்குரைகழல் காட்டிக்
குறிக்கொள்(க) என்று நின் தொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென்(று) இருந்தனன் மருந்தே
அடியனேன் இடர்ப் படுவதும் இனிதோ
சீதவார் புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 8

406. ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினிது ஆண்டாய்
காலன் ஆருயிர் கொண்ட பூங்கழலாய்
கங்கையாய் அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட்டலறும் அம் மலர்க்கே
மரக்கணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 9

407. அளித்து வந்தெனக்கு ஆவ என்றருளி
அச்சந் தீர்த்த நின் அருட்பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே
வளைக் கையானொடு மலரவன் அறியா
வானவா மலை மாதொருபாகா
களிப்பெலா(ம்) மிகக் கலங்கிடுகின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே. 10

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. அடைக்கலப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

408. செழுக்கமலத் திரளன நின்
சேவடி சேர்ந்(து) அமைந்த
பழுத்த மனத்(து) அடிய(ர்) உடன்
போயினர் யான் பாவியேன்
புழுக்க(ண்) உடைப் புன்குரம்பைப்
பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்(து) அடியேன்
உடையாய் உன் அடைக்கலமே. 1

409. வெறுப்பனவே செய்யும் என்சிறுமையை
நின் பெருமையினாற்
பொறுப்பவனே அராப் பூண்பவனே
பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளால்
என் பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 2

410. பெரும் பெருமான் என் பிறவியை
வேரறுத்துப் பெரும் பிச்சுத்
தரும் பெருமான் சதுரப் பெருமான்
என் மனத்தின் உள்ளே
வரும் பெருமான் மலரோன் நெடுமால்
அறியாமல் நின்ற
அரும் பெருமான் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

411. பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில்
நின் கழற் புணைகொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்
யான் இடர்க் கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவெறிய
அழிகின்றனன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 4

412. சுருள்புரி கூழையர் சூழலிற்
பட்(டு) உன் திறம் மறந்திங்கு
இருள்புரி யாக்கையிலே கிடந்(து)
எய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன்
பங்க விண்ணோர் பெருமான்
அருள்புரியாய் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 5

413. மாழை மைப்பாவிய கண்ணியர்
வன் மத்(து) இட உடைந்து
தாழியைப் பாவு தயிர்போல்
தளர்ந்தேன் தட மலர்த்தாள்
வாழி எப்போது வந்(து) எந்நாள்
வணங்குவன் வல்வினையேன்
ஆழியப்பா உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 6

414. மின்கணினார் நுடங்கும் இடையார்
வெகுளி வலையில் அகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப்
புரளாமற் புகுந்தருளி
என்கணிலே அமுதூறித்
தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

415. மாவடு வகிரன்ன கண்ணிபங்கா
நின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய்
நின் குறிப்பறியேன்
பாவிடை ஆடு குழல்போற்
கரந்து பரந்த(து) உள்ளம்
ஆ கெடுவேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 8

416. பிறிவறியா அன்பர் நின் அருட்
பெய்கழல் தாள் இணைக்கீழ்
மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்
உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன்
நின்னை அறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 9

417. வழங்குகின்றாய்க்(கு) உன் அருளார்
அமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்
என் விதி இன்மையால்
தழங்(கு) அருந்தே(ன்) அன்ன தண்ணீர்
பருகத்தந்(து) உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன்
உன் அடைக்கலமே. 10

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. ஆசைப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

418. கருடக் கொடியோன் காண
மாட்டாக் கழற்சேவடி என்னும்
பொருளைத் தந்திங்(கு) என்னை
ஆண்ட பொல்லா மணியே ஓ
இருளைத் துரந்திட்(டு) இங்கே
வாவென்(று) அங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 1

419. மொய்ப்பால் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்(கு) இருக்ககில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவே ஓ
எப்பாலவர்க்கும் அப்பாலாம்
என் ஆரமுதே ஓ
அப்பா காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 2

420. சீவார்ந்து ஈமொய்த்(து) அழுக்கோடு
திரியும் சிறுகுடில் இது சிதையக்
கூவாய் கோவே கூத்தா
காத்(து) ஆட்கொள்ளும் குருமணியே
தேவா தேவர்க்(கு) அரியானே
சிவனே சிறிதென் முக(ம்) நோக்கி
ஆவா என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

421. மிடைந்(து) எலும்(பு) ஊத்தை மிக்(கு) அழுக்(கு) ஊறல்
வீறிலி நடைக் கூடம்
தொடர்ந்தெனை நலியத் துயருறுகின்றேன்
சோத்தம் எம் பெருமானே
உடைந்து நைந்துருகி உன்னொளி
நோக்கி உன் திருமலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 4

422. அளி புண்அகத்துப் புறந்தோல் மூடி
அடியேன்உடை யாக்கை
புளியம்பழம் ஒத்திருந்தேன்
இருந்தும் விடையாய் பொடியாடீ
எளிவந்(து) என்னை ஆண்டு
கொண்ட என் ஆர் அமுதே ஓ
அளியேன் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 5

423. எய்த்தேன் நாயேன் இனி இங்(கு)
இருக்ககில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச்சேவடியானே
முத்தா உன்றன் முகஒளி நோக்கி
முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 6

424. பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா உலகம் தந்து
வந்(து) ஆட்கொள்வோனே
பேராயிரமும் பரவித் திரிந்(து)
எம் பெருமான் என ஏத்த
ஆரா அமுதே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

425. கையால் தொழு(து) என் கழற் சேவடிகள்
கழுமத் தழுவிக்கொண்டு
எய்யாதென்றன் தலைமேல் வைத்(து)
எம் பெருமான் பெருமானென்று
ஐயா என்றன் வாயால் அரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற்(று) அரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 8

426. செடியார் ஆக்கைத் திறமற
வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென்
கண் இணை களிகூரப்
படிதான் இல்லாப் பரம்பரனே
உன் பழ அடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 9

427. வெஞ் சே(ல்) அனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே
நானோர் துணை காணேன்
பஞ்சேரடியாள் பாகத்(து) ஒருவா
பவளத் திருவாயால்
அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. அதிசயப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

428. வைப்பு மாடென்றும் மாணிக்கத்து
ஒளியென்றும் மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவரலியர்
தங்கள் திறத்திடை நைவேனை
ஒப்பிலாதன உவமனில் இறந்தன
ஒண் மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 1

429. நீதி ஆவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவரொடும் கூடேன்
ஏதமே பிறந்(து) இறந்(து) உழல்வேன்தனை
என்னடியான் என்று
பாதி மாதொடும் கூடிய பரம்பரன்
நிரந்தரமாய் நின்ற
ஆதி ஆண்டு தன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 2

430. முன்னை என்னுடை வல்வினை போயிட
முக்கண் அது உடை எந்தை
தன்னை யாவரும் அறிவதற்(கு) அரியவன்
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில்
இளமதி அது வைத்த
அன்னை ஆண்டு தன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

431. பித்தன் என்றெனை உலகவர்
பகர்வதோர் காரணம் இது கேளீர்
ஒத்துச் சென்று தன் திருவருட் கூடிடும்
உபாயம(து) அறியாமே
செத்துப்போய் அரு நரகிடை வீழ்வதற்கு
ஒருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 4

432. பரவுவா(ர்) அவர் பாடு சென்(று) அணைகிலேண்
பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார் குழலார் திறத்தே நின்று
குடி கெடுகின்றேனை
இரவு நின்(று) எரி ஆடிய எம்மிறை
எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 5

433. எண்ணிலேன் திருநாமம் அஞ்செழுத்தும்
என் ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலை ஞானிகள் தம்மொடும்
நல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்(து) இறந்து மண்ணாவதற்கு
ஒருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 6

434. பொத்தை ஊன் சுவர் புழுப் பொதிந்(து) உளுத்து
அசும்(பு) ஒழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதி நின்(று) இடர்க்கடல்
சுழித் தலைப்படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

435. நீக்கி முன் எனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக் கைத்துத்
தூக்கி முன் செய்த பொய்யறத் துகளறுத்(து)
எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 8

436. உற்ற ஆக்கையின் உறுபொருள்
நறுமலர் எழுதரு நாற்றம் போல்
பற்றல் ஆவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 9

437. இருள் திணிந்(து) எழுந்திட்டதோர் வல்வினைச்
சிறுகுடில் இது இத்தைப்
பொருளெனக் களித்து அருநரகத்திடை
விழப் புகுகின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை இடிதரச்
சினப்பதத்தொடு செந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயம் கண்டாமே. 10

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. புணர்ச்சிப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

438. சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்(பு) உகந்து
கடைபட்டேனை ஆண்டுகொண்(டு)
கருணாலயனைக் கருமால் பிரமன்
தடைபட்(டு) இன்னும் சார மாட்டாத்
தன்னைத் தந்த என் ஆரமுதைப்
புடைபட்(டு) இருப்பது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 1

439. ஆற்றகில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்(து) ஐம் புலனாய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
சிவன் எம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணல் போல் நெக்கு நெக்கு
உள்ளே உருகி ஓலம் இட்டுப்
போற்றி நிற்பது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 2

440. நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விரும்பிலேனை
ஆண்டு கொண்ட என் ஆரமுதை
அள்ளூறுள்ளத்(து) அடியார் முன்
வேண்டுந்தனையும் வாய் விட்டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்பது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

441. அல்லிக் கமலத்து அயனும் மாலும்
அல்லாதவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக்கனியைத் தேனைப் பாலை
நிறை இன்அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

442. திகழத்திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்தும் காணமாட்டா
அம்மான் இம் மாநிலம் முழுதும்
நிகழப் பணிகொண்டு என்னை ஆட்கொண்(டு)
ஆஆ என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவ(து) என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 5

443. பரிந்து வந்து பரமானந்தம்
பண்டே அடியேற்கருள் செய்யப்
பிரிந்து போந்து பெரு மாநிலத்தில்
அரு மாலுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்(து) அன்பாய்ப்
புரிந்து நிற்பது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 6

444. நினையப் பிறருக்(கு) அரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனை ஒப்பாரை இல்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையும் கூப்பிக் கடிமலரால்
புனையப் பெறுவது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

445. நெக்குநெக்குள் உருகிஉருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானாவிதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி திகழ
நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 8

446. தாதாய் மூவேழ் உலகுக்கும்
தாயே நாயேன் தனை ஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
மேதா மணியே என்றென்றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந்து அணைவது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 9

447. காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்(கு) எல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பானே எம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ(து) அணைவது என்று கொல்லோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. வாழாப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

448. பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 1

449. வம்பனேன் தன்னை ஆண்ட மாமணியே
மற்று நான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்(கு)
உணர்விறந்(து) உலக(ம்) ஊடுருவும்
செம் பெருமானே சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எம் பெருமானே என்னை ஆள்வானே
என்னை நீ கூவிக்கொண்டருளே. 2

450. பாடி மால் புகழும் பாதமே அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
தேடி நீ ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஊடுவதுன்னோ(டு) உவப்பதும் உன்னை
உணர்த்துவ(து) உனக்(கு) எனக்குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

451. வல்லை வாளரக்கர் புர(ம்) எரித்தானே
மற்று நான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எல்லை மூவுலகும் உருவி அன்றிருவர்
காணும் நாள் ஆதி ஈறின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 4

452. பண்ணின் நேர்மொழியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எண்ணமே உடல் வாய் மூக்கொடு செவி கண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின் மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே 5

453. பஞ்சின்மெல் அடியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டு நீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 6

454. பருதி வாழ் ஒளியாய் பாதமே அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
திரு உயர் கோலச் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
கருணையை நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்து நான் வாழுமா(று) அறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

455. பந்தணை விரலாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அந்த(ம்) இல் அமுதே அரும் பெரும் பொருளே
ஆரமுதே அடியேனை
வந்து(ய்)ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 8

456. பாவ நாசா உன் பாதமே அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
தேவர் தம் தேவே சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
மூவுல(கு) உருவ இருவர் கீழ் மேலாய்
முழங்(கு) அழலாய் நிமிர்ந்தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 9

457. பழுதில் தொல் புகழாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணை என நினைவனோ சொல்லாய்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. அருட்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

458. சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்(து) அயனும்(ம்) மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 1

459. நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி
உலகெலாம் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
அருத்தனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 2

460. எங்கள் நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏல வார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே தக்க நற் காமன்
தனதுடல் தழல்எழ விழித்த
செங்கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
அங்கணா அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

461. கமல நான்முகனும் கார்முகிழ் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்(கு) அரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
வியன் தழல் வெளிப்பட்ட என்தாய்
திமில நான்மறை சேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
அமலனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 4

462. துடிகொள் நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணை முலைக்கண்கள் தோய் சுவடு
பொடிகொள் வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்கு(ம்) மார்பினனே
செடிகொள் வான்பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
அடிகளே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 5

463. துப்பனே தூயாய் தூய வெண்ணீறு
துதைந்(து) எழு துளங்(கு) ஒளி வயிரத்து
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே
செப்பம் ஆம் மறைசேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
அப்பனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 6

464. மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந் தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
ஐயனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

465. முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர் பறித்(து) இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 8

466. மருளனேன் மனத்தை மயக்(கு) அற நோக்கி
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே புனிதா பொங்கு வாள்அரவம்
கங்கைநீர் தங்கு செஞ்சடையாய்
தெருளு(ம்) நான்மறை சேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
அருளனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்(று) அருளாயே. 9

467. திருந்துவார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்த(ம்) மேவிய சீர்
இருந்தவா(று) எண்ணி ஏசறா நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்றென்று
அருந்தவா நினைந்தே ஆதரித்(து) அழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்(று) அருளாயே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. திருக்கழுக்குன்றப் பதிகம்

(திருக்கழுக்குன்றத்தில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

468. பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாததோர் இன்பமே வரும்
துன்பமே துடைத்தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்து மேல் விளையாமல்
என் வினை ஒத்த பின்
கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 1

469. பிட்டு நேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்ட நேர் பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினுங் கடையாய வெங்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 2

470. மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேன் இனி
மேல் விளைவ(து) அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

471. பூணொணாததொர் அன்பு பூண்டு
பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொணாததொர் நாணம் எய்தி
நடுக் கடலுள் அழுந்தி நான்
பேணொணாத பெருந்துறைப் பெருந்
தோணி பற்றி உகைத்தலும்
காணொணாத் திருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 4

472. கோலமேனி வராகமே குணமாம்
பெருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும் அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரியாக நானுனை
நச்சி நச்சிட வந்திடும்
காலமே உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 5

473. பேதம் இல்லதொர் கற்(பு) அளித்த
பெருந்துறைப் பெருவெள்ளமே
ஏதமே பல பேச நீ எனை
ஏதிலார் முனம் என்செய்தாய்
சாதல் சாதல் பொல்லாமை அற்ற
தனிச் சரண் சரணா(ம்) எனக்
காதலால் உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 6

474. இயக்கிமார் அறுபத்து நால்வரை
எண் குணம் செய்த ஈசனே
மயக்கம் ஆயதொர் மும்மலப் பழ
வல்வினைக்குள் அழுந்தவும்
துயக்(கு) அறுத்(து) எனை ஆண்டு கொண்டு நின்
தூய் மலர்க்கழல் தந்தெனைக்
கயக்கவைத்(து) அடியார்முனே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 7

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. கண்ட பத்து

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

475. இந்திரிய வய(ம்) மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போய் அரு நரகில் வீழ்வேற்குச்
சிந்தை தனைத் தெளிவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அந்தம் இலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே 1

476. வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழும்தில்லை அம்பலத்தே கண்டேனே 2

477. உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே. 3

478. கல்லாத புல்அறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன்ஆய் வந்து வனப்பெய்தி இருக்கும்வண்ணம்
பல்லோரும் காண என்தன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சு தில்லைஅம்பலத்தே கண்டேனே. 4

479. சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம் இலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறருருவம் யான் எனது என்உரை மாய்த்து
கோதில் அமு(து) ஆனானைக் குலாவு தில்லை கண்டேனே. 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

480. பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென்று இவை இரண்டும்
உறவினொடும் ஒழியச் சென்று உலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில் சூழ் தில்லை நகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேனே. 6

481. பத்திமையும் பரிசும் இலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன் இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தம் எனும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. 7

482. அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்(டு) இங்கு அறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்(கு)
அளவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவரும் தொழும் தில்லை கண்டேனே. 8

483. பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கி உளத்தொளி வளர உலப்பிலா அன்பருளி
வாங்கி வினை மலம் அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில் தில்லைஅம்பலத்தே கண்டேனே. 9

484. பூதங்கள் ஐந்தாகிப் புலன்ஆகிப் பொருள்ஆகிப்
பேதங்கள் அனைத்தும் ஆய்ப் பேதம்இலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளர் ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. பிரார்த்தனைப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

485. கலந்து நின் அடியாரோடு
அன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்துபோன காலங்கள்
புகுந்து நின்றது இடர் பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச்சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய்
ஆர்வம் கூர அடியேற்கே. 1

486. அடியார் சிலர் உன் அருள் பெற்றார்
ஆர்வம் கூர யான் அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேன் உடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல் பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவா(து) உருக அருளாயே. 2

487. அருளார் அமுதப் பெருங்கடல் வாய்
அடியார் எல்லாம் புக்கழுந்த
இருளார் ஆக்கை இது பொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங்(கு) எனைக் கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெற நான் வேண்டுமே. 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

488. வேண்டும் வேண்டும் மெய்யடியார்
உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர் களைந்த
அமுதே அரு மாமணி முத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்டனேற்கும் உண்டாங் கொல்
வேண்டாதொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. 4

489. மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயற் கண்ணாள்
பங்கா உன் தன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ
பரமானந்தப் பழங்கடல் சேர்ந்(து)
ஆவி யாக்கை யா(ன்) எனதென்(று)
யாதுமின்றி அறுதலே. 5

490. அறவே பெற்றார் நின் அன்பர்
அந்தம் இன்றி அகம் நெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே. 6

491. கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்(து) உண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்(கு)
இருத்தல் அழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதி என்று
உணர்த்தா(து) ஒழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள் நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

492. துணியா உருகா அருள் பெருகத்
தோன்றும் தொண்டர் இடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியார் அடியார் உனக்குள்ள
அன்பும் தாராய் அருள் அளியத்
தணியா(து) ஒல்லை வந்தருளித்
தளிர்ப் பொற்பாதம் தாராயே. 8

493. தாரா அருளொன்(று) இன்றியே
தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேரானந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே. 9

494. மானோர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனம்நெகா
நானோர் தோளாச்சுரை ஒத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனை உணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளும் காலந்தான்
கொடியேற்(கு) என்றோ கூடுவதே. 10

495. கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பார் ஆ
வாடி வாடி வழி அற்றேன்
வற்றல் மரம் போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்(து) உள்உருகிப் பெருகி நெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே ஆக அருள் கலந்தே. 11

**திருச்சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. குழைத்த பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

496. குழைத்தால் பண்டைக் கொடுவினை நோய்
காவாய் உடையாய் கொடு வினையேன்
உழைத்தால் உறுதி உண்டோ தான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறை சேர் சடையாய் முறையோ என்(று)
அழைத்தால் அருளா(து) ஒழிவதே
அம்மானே உன் அடியேற்கே. 1

497. அடியேன் அல்லல் எல்லாம் முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியேர் இடையாள் கூறா எம்
கோவே ஆஆ என்றருளிச்
செடி சேர் உடலைச் சிதையாத(து)
எத்துக்(கு) எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணி கொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே. 2

498. ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின் கருணை
இன்றே இன்றிப் போய்த்தோ தான்
ஏழை பங்கா எம் கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணம் ஆம் என்றே நீ கொண்டால்
என்தான் கெட்டது இரங்கிடாய்
எண் தோள் முக்கண் எம்மானே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

499. மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின் சீர் மறப்பித்திவ்
ஊனே புக என்தனை நூக்கி
உழலப் பண்ணுவித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள் செய்து
கோனே கூவிக் கொள்ளும் நாள்
என்றென்று உன்னைக் கூறுவதே. 4

500. கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகை நீ திகைப்பும் நீ
தீமை நன்மை முழுதும் நீ
வேறோர் பரிசிங்(கு) ஒன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்(து) உரைக்கில்
தேறும் வகை என் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ. 5

501. வேண்டத் தக்க(து) அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்(று) உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே. 6

502. அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்(கு) உண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

503. நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன் வசமே
வைத்திட்(டு) இருக்கும் அது அன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்(கு) அதிகாரம்
காயத்(து) இடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்நுதலே. 8

504. கண்ணார் நுதலோய் கழல் இணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா(து) இரவும் பகலும் நான்
அவையே எண்ணும் அது அல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்(து) உன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகுடைத்தே. 9

505. அழகே புரிந்திட்(டு) அடி நாயேன்
அரற்றுகின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணி கொண்டாய்
புகழே பெரிய பதம் எனக்குப்
புராண நீ தந்(து) அருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. உயிருண்ணிப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

506. பைந்நாப் படஅர(வு) ஏர் அல்குல்
உமை பாக(ம்) அதாய் என்
மெய்ந்நாள் தொறும் பிரியா வினைக்கேடா
விடைப் பாகா
செந் நாவலர் பரசும் புகழ்த்
திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாள் களித்து எந்நாள் இறுமாக்கேன்
இனி யானே. 1

507. நானார் அடிஅணைவான் ஒரு
நாய்க்குத் தவிசு இட்(டு) இங்கு
ஊனார் உடல் புகுந்தான் உயிர் கலந்தான்
உளம் பிரியான்
தேனார் சடைமுடியான் மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளம் ஈந்தனன் எனக்கே. 2

508. எனை நான் என்பது அறியேன் பகல்
இரவாவதும் அறியேன்
மன வாசகம் கடந்தான் எனை
மத்தோன்மத்தன் ஆக்கிச்
சினமால் விடை உடையான் மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச் செய்த படிறு
அறியேன் பரஞ்சுடரே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

509. வினைக்கேடரும் உளரோ பிறர்
சொல்லீர் வியன் உலகில்
எனைத்தான் புகுந்து ஆண்டான் என(து)
என்பின் புரை உருக்கிப்
பினைத்தான் புகுந்து எல்லே பெருந்துறையில்
உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான் மறு
மாற்றத்திடை யானே. 4

510. பற்றாங்கவை அற்றீர் பற்றும்
பற்றாங்கது பற்றி
நற்றாம் கதி அடைவோம் எனின்
கெடுவீர் ஓடி வம்மின்
தெற்றார் சடை முடியான் மன்னு
திருப்பெருந்துறை இறைசீர்
கற்(று) ஆங்கவன் கழல் பேணினரொடுங்
கூடுமின் கலந்தே. 5

511. கடலின் திரையது போல் வரு
கலக்கம் மலம் அறுத்தென்
உடலும் என(து) உயிரும் புகுந்து
ஒழியா வண்ணம் நிறைந்தான்
சுடருஞ் சுடர்மதி சூடிய
திருப்பெருந்துறை உறையும்
படருஞ் சடை மகுடத் தெங்கள்
பரன்தான் செய்த படிறே. 6

512. வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்(பு) இறப்பு சிவம்
வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறை தாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
புறம் போகல் ஒட்டேனே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

513. கோற்றேன் எனக்கு என்கோ குரை
கடல் வாய் அமுது என்கோ
ஆற்றேன் எங்கள் அரனே அரு
மருந்தே என(து) அரசே
சேற்றார் வயல் புடைசூழ் தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்றார் தரு திருமேனி
நின்மலனே உனை யானே. 8

514. எச்சம் அறிவேன் நான் எனக்கு
இருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே அரு
மருந்தே என(து) அமுதே
செச்சை மலர் புரை மேனியன்
திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம் என நெஞ்சில் மன்னி
யான் ஆகி நின்றானே. 9

515. வான் பாவிய உலகத்தவர்
தவமே செய அவமே
ஊன் பாவிய உடலைச் சுமந்(து)
அடவி மரம் ஆனேன்
தேன் பாய் மலர்க் கொன்றை மன்னு
திருப்பெருந்துறை உறைவாய்
நான் பாவியன் ஆனால் உனை
நல்காய் எனல் ஆமே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. அச்சப் பத்து

(திருத்தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

516. புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடை எம் அண்ணல்
கண்நுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர் தெய்வம் தன்னை
உண்டென நினைந்(து) எம் பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 1

517. வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பிரானாம்
திருஉரு அன்றி மற்றோர்
தேவர் எத்தேவர் என்ன
அருவராதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 2

518. வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி
அம்பலத்(து) ஆடுகின்ற
என் பொலாமணியை ஏத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

519. கிளியனார் கிளவி அஞ்சேன்
அவர் கிறி முறுவல் அஞ்சேன்
வெளிய நீ(று) ஆடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளிஉலாம் கண்ணர் ஆகித்
தொழுதழு(து) உள்ளம் நெக்கிங்(கு)
அளி இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 4

520. பிணி எலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ(டு) இறப்பும் அஞ்சேன்
துணி நிலா அணியினான் தன்
தொழும்பரோடு அழுந்தி அம்மால்
திணி நிலம் பிளந்தும் காணாச்
சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 5

521. வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரை புரண்டிடினும் அஞ்சேன்
தோளுலாம் நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்
தாள தாமரைகள் ஏத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆளலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 6

522. தகைவிலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகை முகந்(து) எரிகை வீசிப்
பொலிந்த அம்பலத்துள் ஆடும்
முகை நகைக் கொன்றை மாலை
முன்னவன் பாதம் ஏத்தி
அகம் நெகாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

523. தறிசெறி களிறும் அஞ்சேன்
தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டா
செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்தினி(து) இருக்க மாட்டா
அறிவிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 8

524. மஞ்சுலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோ(டு) உறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம்பிரான் எம்பிரானாய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டா(து)
அஞ்சுவார் அவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 9

525. கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியினானை
நினைந்து நைந்(து) உருகி நெக்கு
வாணிலாம் கண்கள் சோர
வாழ்த்தி நின்(று) ஏத்த மாட்டா
ஆணலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சும் ஆறே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. திருப்பாண்டிப் பதிகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

526. பருவரை மங்கை தன் பங்கரைப்
பாண்டியற்கு ஆரமுதாம்
ஒருவரை ஒன்றும் இலாதவரைக்
கழற்போது இறைஞ்சித்
தெரிவர நின்று உருக்கிப் பரி
மேற் கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி உருவறியாது
என்றன் உள்ளமதே. 1

527. சதுரை மறந்து அறிமால் கொள்வர்
சார்ந்தவர் சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடுமேல்
குடிகேடு கண்டீர்
மதுரையர் மன்னர் மறுபிறப்போட
மறித்திடுமே. 2

528. நீ(ர்) இன்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர்
பா(ர்) இன்ப வெள்ளம் கொளப் பரி
மேற்கொண்ட பாண்டியனார்
ஓ(ர்) இன்ப வெள்ளத்து உருக்கொண்டு
தொண்டரை உள்ளம் கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழலே
சென்று பேணுமினே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

529. செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லன்மின் தென்னன் நன்னாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம் இக்
காலம் எக் காலத்துள்ளும்
அறி(வு) ஒண் கதிர்வாள் உறை கழித்து
ஆனந்தமாக் கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
புரள இருநிலத்தே. 4

530. காலம் உண்டாகவே காதல் செய்(து)
உய்ம்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்
பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்துமினே. 5

531. ஈண்டிய மாயா இருள்கெட
எப்பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனும்
சொல்ல வல்லன் அல்லன்
வேண்டிய போதே விலக்கிலை
வாய்தல் விரும்புமின் தாள்
பாண்டியனார் அருள் செய்கின்ற
முத்திப் பரிசிதுவே. 6

532. மாயவன் அப்பரி மேல் கொண்டு
மற்றவர் கைக்கொளலும்
போயறும் இப்பிறப்(பு) என்னும்
பகைகள் புகுந்தவருக்(கு)
ஆய அரும்பெருஞ் சீருடைத்தன்
அருளே அருளும்
சேய நெடுங்கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

533. அழிவின்றி நின்றதொர் ஆனந்த
வெள்ளத்(து) இடை அழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக்
கடிய வினை அகற்றிப்
பழமலம் பற்றறுத்து ஆண்டவன்
பாண்டிப் பெரும் பதமே
முழுதுலகும் தருவான் கொடையே
சென்று முந்துமினே. 8

534. விரவிய தீவினை மேலைப்
பிறப்பு முந்நீர் கடக்கப்
பரவிய அன்பரை என்புருக்கும்
பரம் பாண்டியனார்
புரவியின் மேல் வரப் புந்தி
கொளப்பட்ட பூங்கொடியார்
மரவியல் மேற்கொண்டு தம்மையும்
தாம் அறியார் மறந்தே. 9

535. கூற்றை வென்று ஆங்(கு) ஐவர் கோக்களையும்
வென்(று) இருந்த அழகாய்
வீற்றிருந்தான் பெருந்தேவியும்
தானும் ஓர் மீனவன் பால்
ஏற்று வந்து ஆருயிர் உண்ட
திறல் ஒற்றைச் சேவகனே
தேற்றம் இலாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37. பிடித்த பத்து

(திருத்தோணிபுரத்தில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

536. உம்பர்கட்கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்(து) என் குடிமுழு(து) ஆண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட்(டு) உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 1

537. விடைவிடா(து) உகந்த விண்ணவர் கோவே
வினையனேனுடைய மெய்ப்பொருளே
முடைவிடா(து) அடியேன் மூத்(து) அற மண்ஆய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணை மாகடலே
இடைவிடா(து) உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 2

538. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

539. அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க்(கு) அரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருள் இடத்(து) அடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருள் இடத்(து) உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 4

540. ஒப்புனக்(கு) இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலியேற்கு
விழுமிய(து) அளித்ததோர் அன்பே
செப்புதற்கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
எய்ப்பிடத்(து) உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 5

541. அறவையேன் மனமே கோயிலாக் கொண்(டு) ஆண்டு
அளவிலா ஆனந்தம் அருளிப்
பிறவி வேர்அறுத்தென் குடி முழுதாண்ட
பிஞ்ஞகா பெரிய எம்பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 6

542. பாசவேர் அறுக்கும் பழம் பொருள் தன்னைப்
பற்றுமா(று) அடியனேற்(கு) அருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

543. அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறுஇல்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 8

544. பால்நினைந்(து) ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 9

545. புன்புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன் நெடுங்கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியைஆய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்கெலாம் அறுத்த நற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. திரு ஏசறவு

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

546. இரும்பு தரு மனத்தேனை ஈர்த்தீர்த்து என் என்புருக்கி
கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை உன் கழல்இணைகள்
ஒருங்கு திரை உலவு சடை உடையானே நரிகள் எல்லாம்
பெருங் குதிரை ஆக்கிய ஆ(று) அன்றே உன் பேரருளே. 1

547. பண்ணார்ந்த மொழி மங்கை பங்கா நின் ஆளானார்க்கு
உண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட்டு ஆள்வாய் நீ வா என்னக்
கண்ணார உய்ந்தவா(று) அன்றே உன் கழல்கண்டே. 2

548. ஆதம் இலியான் பிறப்பு இறப்பென்னும் அருநரகில்
ஆர் தமரும் இன்றியே அழுந்துவேற்(கு) ஆஆஎன்று
ஓதமலி நஞ்சுண்ட உடையானே அடியேற்(கு) உன்
பாதமலர் காட்டியவா(று) அன்றே எம் பரம்பரனே. 3

549. பச்சைத்தால் அரவாட்டீ படர் சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக் கொண்(டு)
எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோ என்
சித்தத்(து) ஆ(று) உய்ந்தவா(று) அன்றே உன் திறம்நினைந்தே. 4

550. கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிற தெய்வம் வாக்(கு) இயலால் வார்கழல் வந்(து)
உற்(று) இறுமாந்து இருந்தேன் எம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடும் ஆறு அன்றே நின் பொன்அருளே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

551. பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின் அருளால்
உய்ஞ்சேன் எம் பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேல் என்(று) ஆண்டவா(று) அன்றே அம்பலத்தமுதே. 6

552. என்பாலைப் பிறப்பறுத்திங்(கு) இமையவர்க்கும் அறியஒண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான்
அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட(து)
என்பாலே நோக்கிய ஆறு அன்றே எம் பெருமானே. 7

553. மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஒத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினாற்
பேர்த்தே நீ ஆண்டவாறு அன்றே எம் பெருமானே. 8

554. மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து உள்ளுருகத்
தெருவு தொறும் மிக அலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகிய நின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா(று)
அருள் எனக்கிங்(கு) இடைமருதே இடங்கொண்ட அம்மானே. 9

555. நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்(து) எனதுள்ளம் புகுந்தடியேற்(கு) அருள் செய்தான்
ஊன் ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. திருப்புலம்பல்

(திருவாரூரில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

556. பூங்கமலத்து அயனொடு மால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறா வெண்ணீறாடி
ஓங்கெயில் சூழ் திருவாரூர் உடையானே அடியேன் நின்
பூங்கழல்கள் அவையல்லா(து) எவையாதும் புகழேனே. 1

557. சடையானே தழலாடீ தயங்கு மூவிலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில் சூழ் பெருந்துறையாய் அடியேன் நான்
உடையானே உனையல்லா(து) உறுதுணை மற்றறியேனே. 2

558. உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்(து) அமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. 3

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40. குலாப்பத்து

(திருத்தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

559. ஓடும் கவந்தியுமே உற(வு) என்றிட்டு உள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 1

560. துடியேர் இடு(கு) இடைத் தூய்மொழியார் தோள் நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத் தன தாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 2

561. என்புள் உருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்(பு) உள்ளவற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 3

562. குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள் தமைப்
பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியும் கருத்தில் உருத்(து) அமுதாம் சிவபதத்தை
அறியும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 4

563. பேரும் குணமும் பிணிப்புறும் இப்பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டர் எல்லாம்
சேரும் வகையால் சிவன் கருணைத் தேன் பருகி
ஆரும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

564. கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே
நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம் நான் அணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6

565. மதிக்கும் திறலுடைய வல்லரக்கன் தோள் நெரிய
மிதிக்கும் திருவடி என்தலை மேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றும் இலோம் எனக்களித்(து) இங்கு
அதிர்க்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 7

566. இடக்கும் கரு முருட்(டு) ஏனப்பின் கானகத்தே
நடக்கும் திருவடி என் தலைமேல் நட்டமையால்
கடக்கும் திறல் ஐவர் கண்டகர் தம் வல் ஆட்டை
அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 8

567. பாழ்ச்செய் விளாவிப் பயன் இலியாய்க் கிடப்பேற்கு
கீழ்ச்செய் தவத்தால் கிழியீடு நேர்பட்டுத்
தாட் செய்யதாமரைச் சைவனுக்(கு) என் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 9

568. கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்(கு)
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்(கு) ஒழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41. அற்புதப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

569. மையலாய் இந்த மண்ணிடை
வாழ்வெனும் ஆழியுள் அகப்பட்டுத்
தையலார் எனும் சுழித்தலைப்பட்டு
நான் தலை தடுமாறாமே
பொய்யெலாம் விடத் திருவருள்
தந்துதன் பொன்னடி இணைகாட்டி
மெய்யனாய் வெளிகாட்டி முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே 1

570. ஏய்ந்த மாமலர் இட்டு முட்டாததோர்
இயல்பொடும் வணங்காதே
சாந்தம் ஆர்முலைத் தையல் நல்லாரொடும்
தலை தடுமாறாகிப்
போந்து யான் துயர் புகாவணம் அருள்செய்து
பொற்கழல் இணைகாட்டி
வேந்தனாய் வெளியே என் முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே 2

571. நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நா(ன்) என(து) எனு(ம்) மாயக்
கடித்த வாயிலே நின்று முன் வினை மிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்து அடித்து அக்கார(ம்) முன் தீற்றிய
அற்புதம் அறியேனே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

572. பொருந்தும் இப்பிறப்(பு) இறப்பிவை
நினையாது பொய்களே புகன்றுபோய்க்
கருங் குழலினார் கண்களால்
ஏறுண்டு கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை
சிலம்பிடத் திருவொடும் அகலாதே
அருந் துணைவனாய் ஆண்டு கொண்(டு) அருளிய
அற்புதம் அறியேனே. 4

573. மாடும்சுற்றமும் மற்றுள
போகமும் மங்கையர் தம்மோடுங்
கூடிஅங்குள குணங்களால்
ஏறுண்டு குலாவியே திரிவேனை
வீடுதந்தென்றன் வெந்தொழில்
வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி
ஆடுவித்தெனது அகம் புகுந்(து) ஆண்டதோர்
அற்புதம் அறியேனே 5

574. வணங்கும் இப்பிறப்(பு) இறப்பிவை
நினையாது மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெரு வெள்ளத்(து)
அழுந்தி நான் பித்தனாய்த் திரிவேனைக்
குணங்களும் குறிகளும் இலாக்
குணக்கடல் கோமளத்தொடுங் கூடி
அணைந்து வந்தெனை ஆண்டு கொண்டு அருளிய
அற்புதம் அறியேனே 6

575. இப் பிறப்பினில் இணைமலர் கொய்து நான்
இயல்பொடு அஞ்செழுத்(து) ஓதித்
தப்பிலாது பொற் கழல்களுக்(கு) இடாது நான்
தட முலையார் தங்கள்
மைப்புலாம் கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை
மலரடி இணைகாட்டி
அப்பன் என்னை வந்(து) ஆண்டுகொண்(டு) அருளிய
அற்புதம் அறியேனே 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

576. ஊசல் ஆட்டும் இவ் உட(ல்) உயிர்
ஆயின இருவினை அறுத்து என்னை
ஓசையால் உணர்வாக்(கு) உணர்(வு)
அரியவன் உணர்வுதந்(து) ஒளி ஆக்கிப்
பாசம் ஆனவை பற்றறுத்(து)
உயர்ந்த தன் பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்(து) அடியாரடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே 8

577. பொச்சை ஆன இப் பிறவியில்
கிடந்து நான் புழுத்தலை நாய் போல
இச்சை ஆயின ஏழையர்க்கே
செய்தங்கு இணங்கியே திரிவேனை
இச்சகத்(து) அரி அயனும் எட்டாத
தன் விரை மலர்க் கழல்காட்டி
அச்சன் என்னையும் ஆண்டு கொண்(டு) அருளிய
அற்புதம் அறியேனே 9

578. செறியும் இப்பிறப்(பு) இறப்பிவை நினையாது
செறி குழலார் செய்யும்
கிறியும் கீழ்மையும் கெண்டை அங்கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லையில்லாத
தன் இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்தெனை ஆண்டுகொண்(டு) அருளிய
அற்புதம் அறியேனே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42. சென்னிப்பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

579. தேவ தேவன் மெய்ச் சேவகன்
தென்பெருந்துறை நாயகன்
மூவராலும் அறியொணா முதல்
ஆய ஆனந்த மூர்த்தியான்
யாவர் ஆயினும் அன்பர் அன்றி
அறியொணா மலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிச் சுடருமே. 1

580. அட்ட மூர்த்தி அழகன் இன்னமுது
ஆய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச் சிவலோக நாயகன்
தென்பெருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழல் மங்கையாளை ஓர்
பாகம் வைத்த அழகன் தன்
வட்ட மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 2

581. நங்கைமீர் எனை நோக்குமின் நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ் பெருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கைமார் கையில் வளையும் கொண்(டு) எம்
உயிரும் கொண்(டு) எம் பணி கொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிப் பொலியுமே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

582. பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து பார்ப்பான் எனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடம் செய்வான்
எத்தனாகி வந்(து) இல் புகுந்(து) எமை
ஆளும் கொண்(டு) எம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 4

583. மாய வாழ்க்கையை மெய்யென்றெண்ணி
மதித்திடா வகை நல்கினான்
வேய தோள் உமைபங்கன் எங்கள்
திருப்பெருந்துறை மேவினான்
காயத்துள் அமுது ஊற ஊற நீ
கண்டு கொள் என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 5

584. சித்தமே புகுந்(து) எம்மை ஆட்கொண்டு
தீவினை கெடுத்(து) உய்யலாம்
பத்தி தந்து தன் பொற் கழற்கணே
பன்மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்(து) இந்த மூவுலகுக்கும்
அப்புறத்(து) எமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 6

585. பிறவி என்னும் இக்கடலை நீந்தத் தன்
பேரருள் தந்(து) அருளினான்
அறவை என்றடியார்கள் தங்கள்
அருட் குழாம் புகவிட்டு நல்
உறவு செய்தெனை உய்யக் கொண்ட
பிரான் தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

586. புழுவினாற் பொதிந்திடு குரம்பையிற்
பொய்தனை ஒழிவித்திடும்
எழில் கொள் சோதி எம் ஈசன் எம்பிரான்
என்னுடை அப்பன் என்றென்று
தொழுத கையினர் ஆகித் தூய்மலர்க்
கண்கள் நீர்மல்கும் தொண்டர்க்கு
வழுவிலா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 8

587. வம்பனாய்த் திரிவேனை வா என்று
வல்வினைப் பகை மாய்த்திடும்
உம்பரான் உல(கு) ஊடறுத்(து)
அப்புறத்தனாய் நின்ற எம்பிரான்
அன்பர் ஆனவர்க்கருளி மெய்யடியார்கட்கு
இன்பம் தழைத்திடும்
செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 9

588. முத்தனை முதற் சோதியை முக்கண்
அப்பனை முதல் வித்தினைச்
சித்தனைச் சிவலோகனைத் திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர்காள் இங்கே வம்மின் நீ(ர்) உங்கள்
பாசம் தீரப் பணிமினோ
சித்தம் ஆர்தரும் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43. திருவார்த்தை

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

589. மாதிவர் பாகன் மறை பயின்ற
வாசகன் மாமலர் மேய சோதி
கோதில் பரங்கருணை அடியார்
குலாவு நீதிகுணம் ஆக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்(து) இழிந்(து)
ஆதிப்பிரமம் வெளிப்படுத்த
அருளறிவார் எம்பிரான் ஆவாரே. 1

590. மாலயன் வானவர்கோனும் வந்து
வணங்க அவர்க்கருள் செய்த ஈசன்
ஞாலம் அதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலந் திகழும்
கோல மணி அணி மாடம் நீடு
குலாவு(ம்) இடைவை மட நல்லாட்குச்
சீல மிகக் கருணை அளிக்கும்
திறமறிவார் எம்பிரான் ஆவாரே. 2

591. அணிமுடி ஆதி அமரர் கோமான்
ஆனந்தக் கூத்தன் அறுசமயம்
பணிவகை செய்து படவ(து) ஏறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறை எம்
பேரருளாளன் பெண்பால் உகந்து
மணிவலை கொண்டு வான் மீன் விசிறும்
வகையறிவார் எம்பிரான் ஆவாரே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

592. வேடுரு ஆகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்(து) அடியோங்கள் உய்ய
ஆடல் அமர்ந்த பரிமா ஏறி
ஐயன் பெருந்துறை ஆதி அந்நாள்
ஏடர்களை எங்கும் ஆண்டுகொண்ட
இயல்பறிவார் எம்பிரான் ஆவாரே. 4

593. வந்(து) இமையோர்கள் வணங்கி ஏத்த
மாக்கருணைக் கடலாய் அடியார்
பந்தனை விண்(டு) அற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்
உந்து திரைக்கடலைக் கடந்தன்று
ஓங்குமதில் இலங்கை அதனில்
பந்தணை மெல்விரலாட்கு அருளும்
பரிசறிவார் எம்பிரான் ஆவாரே. 5

594. வேவத் திரிபுரம் செற்ற வில்லி
வேடுவனாய்க் கடிநாய்கள் சூழ
ஏவல் செயல் செய்யும் தேவர் முன்னே
எம்பெருமான் தான் இயங்கு காட்டில்
ஏவுண்ட பன்றிக்கு இரங்கி ஈசன்
எந்தை பெருந்துறை ஆதி அன்று
கேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த
கிடப்பறிவார் எம்பிரான் ஆவாரே. 6

595. நாதம் உடைய(து) ஓர் நற்கமலப்
போதினில் நண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்(து) அலர் தூவி ஏத்த
ஒளிவளர் சோதி எம் ஈசன் மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றிப்
பேதம் கெடுத்தருள் செய் பெருமை
அறிய வல்லார் எம்பிரான் ஆவாரே 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

596. பூவலர் கொன்றை அம் மாலை மார்பன்
போர் உகிர் வன்புலி கொன்ற வீரன்
மாது நல்லாள் உமை மங்கை பங்கன்
வண்பொழில் சூழ் தென்பெருந்துறைக் கோன்
ஏதில் பெரும்புகழ் எங்கள் ஈசன்
இருங்கடல் வாணற்குத் தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர் தோள் புணரும்
உருவறிவார் எம்பிரான் ஆவாரே. 8

597. தூவெள்ளை நீறணி எம்பெருமான்
சோதி மகேந்திர நாதன் வந்து
தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளி அன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்(து) உருகக்
கேதம் கெடுத்தென்னை ஆண்டருளும்
கிடப்பறிவார் எம்பிரான் ஆவாரே. 9

598. அங்கணன் எங்கள் அமரர் பெம்மான்
அடியார்க்கு அமுதன் அவனி வந்த
எங்கள் பிரான் இரும்பாசம் தீர
இகபரம் ஆயதோர் இன்பம் எய்தச்
சங்கம் கவர்ந்து வண் சாத்தினோடும்
சதுரன் பெருந்துறை ஆளி அன்று
மங்கையர் மல்கு(ம்) மதுரை சேர்ந்த
வகையறிவார் எம்பிரான் ஆவாரே. 10

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44. எண்ணப் பதிகம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

599. பாருரு ஆய பிறப்பற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்
சீருரு ஆய சிவபெருமானே
செங்கமல மலர்போலும்
ஆருருஆய என் ஆரமுதே உன்
அடியவர் தொகை நடுவே
ஓருருஆய நின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே. 1

600. உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங்(கு) ஒருபொழுதும்
தரியேன் நாயேன் இன்னதென்(று)
அறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்(று) உன்
பெய்கழல் அடி காட்டிப்
பிரியேன் என்றென்(று) அருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே. 2

601. என்பே உருக நின் அருள் அளித்துன்
இணைமலர் அடி காட்டி
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனை உருக்கி
உயி(ர்) உண்கின்ற எம்மானே
நண்பே அருளாய் என் உயிர்
நாதா நின்னருள் நாணாமே. 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

602. பத்திலனேனும் பணிந்திலனேனும் உன்
உயர்ந்த பைங்கழல் காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும்
பிறப்பறுப்பாய் எம்பெருமானே
முத்தனையானே மணியனையானே
முதல்வனே முறையோ என்று
எத்தனையானும் யான் தொடர்ந்து உன்னை
இனிப் பிரிந்தாற்றேனே. 4

603. காணுமதொழிந்தேன் நின் திருப்பாதம்
கண்டு கண்களி கூரப்
பேணுமதொழிந்தேன் பிதற்றுமதொழிந்தேன்
பின்னை எம்பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந்(து)
உருகும் தன்மை என் புன்மைகளால்
காணுமதொழிந்தேன் நீ இனி
வரினும் காணவும் நாணுவனே. 5

604. பால் திருநீற்றெம் பரமனைப்
பரங்கருணையோடும் எதிர்ந்து
தோற்றி மெய்அடியார்க்கு அருள்துறை
அளிக்கும் சோதியை நீதியிலேன்
போற்றி என் அமுதே என நினைந்(து) ஏத்திப்
புகழந்(து) அழைத்(து) அலறி என்னுள்ளே
ஆற்றுவன் ஆக உடையவனே எனை
ஆவ என்றருளாயே. 6

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45. யாத்திரைப் பத்து

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

605. பூவார் சென்னி மன்னன் எம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா(து) உள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப்பட்(டு) அன்பாய்
ஆட்பட்டீர் வந்தொருப்படுமின்
போவோம் காலம் வந்தது காண்
பொய் விட்(டு) உடையான் கழல்புகவே. 1

606. புகவே வேண்டா புலன்களில் நீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே உடையான் தனைச்சாரத்
தளராதிருப்பார் தாம் தாமே. 2

607. தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதி வகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவை போகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு
போமாறு அமைமின் பொய் நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

608. அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசேர் அடியே வந்தடைந்து
கடைக்கொண்டிருமின் திருக்குறிப்பைச்
செடிசேர் உடலைச் செல நீக்கிச்
சிவலோகத்தே நமை வைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன் தன்
பூவார் கழற்கே புகவிடுமே. 4

609. விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனி இல்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ(டு)
உடன் போவதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ(து) அடையாமே
புடைபட்(டு) உருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

610. புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்தி வைத்திட்(டு)
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூறு அடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கி நாம்
நிகழும் அடியார் முன் சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே. 6

611. நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ் கணித்தால்
பெறுதற்(கு) அரியன் பெருமானே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

612. பெருமான் பேரானந்தத்துப்
பிரியாதிருக்கப் பெற்றீர்காள்
அருமால் உற்றுப் பின்னை நீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமாமணி சேர் திருக் கதவம்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. 8

613. சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே. 9

614. புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்(து) ஆள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பா(ர்) ஆர்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீராகில் இதுசெய்மின்
சிவலோகக் கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே. 10

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46. திருப்படை எழுச்சி

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

615. ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப் பறை அறைமின்
மானமா ஏறும் ஐயர் மதிவெண் குடை கவிமின்
ஆனநீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்
வான ஊர்கொள்வோம் நாம் மாயப்படை வாராமே. 1

616. தொண்டர்காள் தூசி செல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர் நாடு ஆள்வோம் நாம் அல்லற்படை வாராமே. 2

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47. திருவெண்பா

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

617. வெய்யவினை இரண்டும் வெந்தகல மெய்உருகிப்
பொய்யும் பொடியாகாது என் செய்கேன் - செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா(து) இருந்தேன் மனத்து. 1

618. ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் - தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தான் என்பார் ஆரொருவர் தாழ்ந்து. 2

619. செய்த பிழைஅறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் - வையத்து
இருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

620. முன்னை வினை இரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணையாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து. 4

621. அறையோ அறிவார்க்கு அனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும் மால்கொள்ளும் - இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்துறையும் என்நெஞ்சத்து இன்று. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

622. பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே ஆக்கும் வந்(து) என்மனத்தை - அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. 6

623. வாரா வழிஅருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே - சீரார்
திருத் தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 7

624. யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை - யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. 8

625. மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான் - மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

626. இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்து
இருந்திரந்து கொள் நெஞ்சே எல்லாம் - தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங் கருணையாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. 10

627. இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 11

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48. பண்டாய நான்மறை

(திருப்பெருந்துறையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

628. பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரும் இல்லைக் கடையேனைத் - தொண்டாகக்
கொண்டருளும் கோகழியெம் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா(று) உரை. 1

629. உள்ள மலமூன்றும் மாய உகு பெருந்தேன்
வெள்ளம் தரும் பரியின் மேல்வந்த - வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும் பிறவிக் காடு. 2

630. காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அம்கமல பாதம்
மருளும்கெட நெஞ்சே வாழ்த்து. 3

631. வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும் - சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். 4

632. நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழு கோகழிக் கரசைப் - பண்ணின்
மொழியாளோ(டு) உத்தரகோச மங்கை மன்னிக்
கழியா(து) இருந்தவனைக் காண். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

633. காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு. 6

634. பேசும் பொருளுக்கு இலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. 7

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49. திருப்படை ஆட்சி

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

635. கண்கள் இரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில் என்
வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடும்
ஆறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப்பாதம்
இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ(டு)
ஆடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டி நல் நாடுடையான் படை
ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண் களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே. 1

636. ஒன்றினொடு ஒன்று(ம்) ஓர் ஐந்தினொடு
ஐந்தும் உயிர்ப்பறும் ஆகாதே
உன்னடியார் அடியார் அடியோம் என
உய்ந்தன ஆகாதே
கன்றை நினைந்(து) எழு தாயென
வந்த கணக்கது ஆகாதே
காரணமாகும் அனாதி
குணங்கள் கருத்துறும் ஆகாதே
நன்றிது தீதென வந்த
நடுக்கம் நடந்தன ஆகாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமுமெலாம் அடியாருடனே
செல நண்ணுதும் ஆகாதே
என்றுமென் அன்பு நிறைந்த
பரா அமு(து) எய்துவ(து) ஆகாதே
ஏறுடையான் எனை ஆளுடை
நாயகன் என்னுள் புகுந்திடிலே. 2

637. பந்த விகார குணங்கள்
பறிந்து மறிந்திடும் ஆகாதே
பாவனைஆய கருத்தினில்
வந்த பரா அமு(து) ஆகாதே
அந்தமிலாத அகண்டமும்
நம்முள் அகப்படும் ஆகாதே
ஆதி முதற்பரமாய
பரஞ்சுடர் அண்ணுவ(து) ஆகாதே
செந்துவர் வாய் மடவா(ர்) இட(ர்)
ஆனவை சிந்திடும் ஆகாதே
சேலன கண்கள் அவன் திருமேனி
திளைப்பன ஆகாதே
இந்திர ஞால இடர் பிறவித்துயர்
ஏகுவ தாகாதே
என்னுடை நாயகன் ஆகிய
ஈசன் எதிர்ப்படும் ஆயிடிலே. 3

638. என் அணியார் முலை ஆகம்
அளைந்துடன் இன்புறுமாகாதே
எல்லையின் மாக்கருணைக் கடல்
இன்றினி(து) ஆடுதும் ஆகாதே
நன்மணி நாதம் முழங்கியென்
உள்ளுற நண்ணுவ தாகாதே
நாதன் அணித் திருநீற்றினை
நித்தலும் நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரில் என்பணி
முந்துற வைகுவ தாகாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமறையும் அறியா மலர்ப்பாதம்
வணங்குதும் ஆகாதே
இன்னியற் செங்கழு நீர்மலர்
என்தலை எய்துவ தாகாதே
என்னையுடைப் பெருமான் அருள்
ஈசன் எழுந்தருளப் பெறிலே. 4

639. மண்ணினில் மாயை மதித்து
வகுத்த மயக்கறும் ஆகாதே
வானவரும் அறியா மலர்ப்
பாதம் வணங்குதும் ஆகாதே
கண்ணிலி கால மனைத்தினும்
வந்த கலக்கறும் ஆகாதே
காதல் செயும் அடியார்மனம்
இன்று களித்திடும் ஆகாதே
பெண் ணலி ஆணென நாமென
வந்த பிணக்கறும் ஆகாதே
பேரறியாத அனேக
பவங்கள் பிழைத்தன ஆகாதே
எண்ணிலி யாகிய சித்திகள்
வந்தெனை எய்துவ தாகாதே
என்னையுடைப் பெருமான் அருள்
ஈசன் எழுந்தருளப் பெறிலே. 5

640. பொன்னியலுந் திருமேனி வெண்ணீறு
பொலிந்திடும் ஆகாதே
பூமழை மாதவர் கைகள்
குவிந்து பொழிந்திடும் ஆகாதே
மின்னியல் நுண்ணிடை யார்கள்
கருத்து வெளிப்படும் ஆகாதே
வீணை முரன்றெழும் ஓசையின்
இன்பம் மிகுத்திடும் ஆகாதே
தன்னடியார் அடி என்தலை
மீது தழைப்பன ஆகாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானடியோம் உடனே உய
வந்து தலைப்படும் ஆகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி
தாக இயம்பிடும் ஆகாதே
என்னைமுன் ஆளுடை ஈசன்
என்அத்தன் எழுந்தருளப் பெறிலே. 6

641. சொல்லியலா(து) எழு தூமணி
ஓசை சுவைதரும் ஆகாதே
துண்ணென என்னுளம் மன்னிய
சோதி தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற
வந்த பராபரம் ஆகாதே
பண்டறியாத பரானுபவங்கள்
பரந்தெழும் ஆகாதே
வில்லியல் நன்னுதலார் மயலின்று
விளைந்திடும் ஆகாதே
விண்ணவரும் அறியாத
விழுப்பொருள் இப் பொருளாகாதே
எல்லையிலாதன எண்குணமானவை
எய்திடும் ஆகாதே
இந்து சிகாமணி எங்களை
ஆள எழுந்தரு ளப்பெறிலே. 7

642. சங்கு திரண்டு முரன்றெழும்
ஓசை தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள்
நம்மோடு சலித்திடும் ஆகாதே
அங்கிது நன்றிது நன்றெனுமாயை
அடங்கிடும் ஆகாதே
ஆசையெலாம் அடியார் அடியோமெனும்
அத்தனை ஆகாதே
செங்கயல் ஒண்கண் மடந்தையர்
சிந்தை திளைப்பன ஆகாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரடியார்கள் சிவானுபவங்கள்
தெரிந்திடும் ஆகாதே
எங்கும் நிறைந்தமுதூறு
பரஞ்சுடர் எய்துவ தாகாதே
ஈறறியா மறையோன் எனைஆள
எழுந்தருளப் பெறிலே. 8

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50. ஆனந்த மாலை

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

643. மின்னேர் அனைய பூங்கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னேர் அனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரர் எல்லாம்
கன்னேர் அனைய மனக் கடையாய்க்
கழிப்புண்(டு) அவலக் கடல் வீழ்ந்த
என்னேர் அனையேன் இனி உன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே. 1

644. என்னால் அறியாப் பதந் தந்தாய்
யான் அதறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவில்லை
உடையாய் அடிமைக்(கு) ஆரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியாரொடுங் கூடா(து)
என் நாயகமே பிற்பட்டிங்(கு)
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே. 2

645. சீலம் இன்றி நோன்பின்றிச்
செறிவே இன்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

646. கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடிலாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவதெல்லா(ம்) நான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத்(து) அழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா(து) ஒழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே. 4

647. தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன்
தயா நீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ. 5

648. கோவே அருள வேண்டாவோ
கொடியேன் கெடவே அமையுமே
ஆவா என்னாவிடில் என்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான்
சாவார் எல்லாம் என்னளவோ
தக்கஆறன்(று) என்னாரோ
தேவே தில்லை நடமாடி
திகைத்தேன் இனித்தான் தேற்றாயே. 6

649. நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச(து) ஏற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே. 7

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. அச்சோப் பதிகம்

(தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

650. முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்(கு) அருளிவா(று) ஆர்பெறுவார் அச்சோவே. 1

651. நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறிஒன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தை எனக்(கு)
அறியும்வண்ணம் அருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 2

652. பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையல்உறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையல்இடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 3

653. மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணம்இலா அன்பருளி எனைஆண்டிட்(டு) என்னையும்தன்
சுண்ணவெண் நீறணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல் எனக்(கு) அருளியவா(று) ஆர்பெறுவார் அச்சோவே. 4

654. பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன் உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருகவென்(று)
அஞ்சேல் என்றருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

655. வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத்(து) எனையாண்டு பரிசற என் துரிசுமறுத்(து)
அந்தமெனக்(கு) அருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 6

656. தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனும் தாழுருவி
உய்யும்நெறி காட்டுவித்திட்(டு) ஓங்காரத்(து) உட்பொருளை
ஐயன்எனக் கருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 7

657. சாதல் பிறப்பென்னும் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின் மிக்(கு) அணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொரு கூறுடையபிரான் தன்கழலே சேரும் வண்ணம்
ஆதியெனக்(கு) அருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 8

658. செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக்(கு) அருளியவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 9

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சோப் பதிக மிகைப்பாடல்கள்

**திருச்சிற்றம்பலம்**

செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும்
அத்தனையும் அறியாதார் அறியு(ம்) அறிவு எவ்வறிவோ
ஒத்தநிலம் ஒத்தபொருள் ஒருபொருளாம் பெரும்பயனை
அத்தன்எனக்கு அருளிவா(று) ஆர் பெறுவார் அச்சோவே. 1

படியதனிற் கிடந்திந்தப் பசுபாசந் தவிர்ந்துவிடும்
குடிமையிலே திரிந்தடியேன் கும்பியிலே விழாவண்ணம்
நெடியவனும் நான்முகனும் நீர்கான்றுங் காணவொண்ணா
அடிகளெனக்கு அருளியவா(று) ஆர் பெறுவா(ர்) அச்சோவே. 2

பாதியெனு(ம்) இரவுறங்கிப் பகலெமக்கே இரைதேடி
வேதனையி(ல்) அகப்பட்டு வெந்துவிழக் கடவேனைச்
சாதிகுலம் பிறப்பறுத்துச் சகமறிய எனையாண்ட
ஆதியெனக்(கு) அருளியவா(று) ஆர் பெறுவா(ர்) அச்சோவே. 3

**திருச்சிற்றம்பலம்**

**திருவாசகம் முற்றிற்று**

**தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி**
**அல்லல் அறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறி அளிக்கும் வாதவூ ர் எங்கோன்**
**திருவாசகம் என்னும் தேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல் முதற்குறிப்பு அகரவரிசை

(எண் : பாட்டின் தொடர் எண்)


அங்கணன் 598
அங்கியருக்கன் 289
அடர்புலனால் 142
அடற்கரி 136
அடியாரானீர் 608
அடியார் சிலர் 486
அடியேன் அல்லல் 497
அடியேன் அல்லேன் 087
அட்டமூர்த்தி 580
அணிமுடி 591
அண்டப்பகுதி 003
அண்ணாமலையான் 172
அதுபழ 374
அத்தனே 543
அத்தியுரித்தது 293
அத்தேவர் 219
அப்பனே 102
அம்பரமாம் 273
அம்பலத்தே 271
அம்மையே 538
அயனை அநங்கனை 258
அயன்தலை 212
அரிக்கும் 237
அரியானே 022
அருணன் 369
அருந்தவர் 274
அருமந்த தேவர் 239
அருளாதொழி 385
அருளாரமுத 487
அருளுடை 539
அரைசனே 390
அரைசே 141
அரைசேபொன் 382
அரையாடு 240
அலரவனும் 260
அல்லிக்கமல 441
அவமாய 238
அழகேபுரி 505
அழிவின்றி 533
அழுகேன் 092
அளவறு 039
அளவிலா 482
அளித்து 407
அளிபுண் 422
அறவேபெற்றார் 490
அறவையேன் 541
அறிவனே 054
அறிவிலா 036
அறுகெடு 199
அறுக்கிலேன் 403
அறையோ 621
அன்பராகி 401
அன்பினால் 389
அன்றாலநீழல் 287
அன்றே என்றன் 502
அன்னே 161
ஆடரப்பூணுடை 341
ஆடுகின்றிலை 035
ஆட்டின் 305
ஆட்டுத்தேவர் 402
ஆணோ அலியோ 333
ஆதமிலி 548
ஆதியும் அந்தமும் 155
ஆமாறுன் 018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆயநான் | 027 |
| ஆயமொழி | 366 |
| ஆர்க்கோ | 618 |
| ஆர்த்தபிறவி | 166 |
| ஆவகை நாமும் | 210 |
| ஆவா அரி | 241 |
| ஆவா திருமால் | 300 |
| ஆற்றகில்லேன் | 439 |
| ஆனையாய்க் | 188 |
| ஆனைவெம் | 125 |
| இடக்கும் | 566 |
| இணையார் | 275 |
| இந்திரனும் | 177 |
| இந்திரிய | 475 |
| இப்பாடே | 363 |
| இப்பிறப்பினில் | 575 |
| இயக்கிமாரறு | 474 |
| இரங்கும் | 384 |
| இரந்திரந்து | 393 |
| இருகை | 045 |
| இருதலைக் | 113 |
| இருந்தென்னைஆண்டு | 122 |
| இருந்தென்னையாண்ட | 626 |
| இருப்பு | 084 |
| இரும்புதரு | 546 |
| இருள்திணிந்து | 437 |
| இல்லை | 098 |
| இழித்தனன் | 070 |
| இன்பந்தரு | 353 |
| இன்பம் | 627 |
| இன்பால் | 365 |
| இன்றெென | 394 |
| இன்னிசை | 371 |
| ஈசனேநீ | 082 |
| ஈசனேஎன் | 055 |
| ஈண்டிய | 531 |
| ஈரம்பு | 296 |
| உகந்தானே | 380 |
| உங்கையில் | 173 |
| உடைய நாதனே | 101 |
| உடையாளுன்றன் | 378 |
| உடையானே | 060 |
| உணர்ந்தமா | 391 |
| உண்டொ | 046 |
| உண்ண | 306 |
| உத்தமன் | 007 |
| உம்பர்கட் | 536 |
| உய்யவல்லார் | 298 |
| உரியேன் | 600 |
| உருகிப்பெருகி | 249 |
| உருத்தெரியா | 477 |
| உரைமாண்ட | 328 |
| உலக்கை | 200 |
| உலவா | 058 |
| உவலைச் | 251 |
| உழிதரு | 012 |
| உழைதரு | 150 |
| உள்ளப் | 230 |
| உள்ளமல | 629 |
| உள்ளன | 128 |
| உற்றஆக்கையின் | 436 |
| உற்றாரை | 558 |
| உன்னற்கரியசீர் | 343 |
| உன்னற்கரிய திரு | 335 |
| உன்னை உகப்பன் | 354 |
| ஊசலாட்டு | 576 |
| ஊனாய் உயிராய் | 190 |
| எங்கள் நாயகனே | 460 |
| எச்சம் அறி | 514 |
| எண்ணிலேன் | 433 |
| எண்ணுடை | 323 |
| எந்தை ஆய் | 051 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| எந்தை யெந்தாய் | 276 |
| எம்பிரான் | 071 |
| எய்தலாவ | 081 |
| எய்த்தேன் | 423 |
| எரிமூன்று | 280 |
| எறும்பிடை | 129 |
| எனை நானென்ப | 508 |
| என் பாலைப் | 552 |
| என்புள் உரு | 561 |
| என்பே | 601 |
| என்றும் | 316 |
| என்னணி | 638 |
| என்னப்பன் | 256 |
| என்னால் அறியா | 644 |
| என்னை | 120 |
| ஏகாச | 314 |
| ஏசாநிற்பர் | 383 |
| ஏசினும் யான் | 154 |
| ஏதமிலா | 359 |
| ஏய்ந்த | 570 |
| ஏரார் இளங் | 358 |
| ஏர்தரும் | 349 |
| ஏழை | 327 |
| ஏனை யாவ | 042 |
| ஐய நின்ன | 077 |
| ஒண்ணித் | 158 |
| ஒண்மைய | 126 |
| ஒப்புனக்கு | 540 |
| ஒருவனே | 072 |
| ஒன்றாய் | 222 |
| ஒன்றினொடு | 636 |
| ஒன்றும்போதா | 498 |
| ஓடுங்கவந்தி | 559 |
| ஓயாதே | 181 |
| ஓய்விலா | 043 |
| ஓரொருகால் | 169 |

| | |
|---|---|
| கடகரியும் | 269 |
| கடலினுள் | 117 |
| கடலின்திரை | 511 |
| கடலேஅனைய | 491 |
| கடவுளே | 068 |
| கடையவ | 105 |
| கட்டறு | 053 |
| கண்கள் | 635 |
| கண்டது | 137 |
| கண்ணஞ்சன | 339 |
| கண்ணப்பன் | 218 |
| கண்ணார் | 504 |
| கதியடி | 146 |
| கமலநான் | 461 |
| கயல்மாண்ட | 245 |
| கரணங்கள் | 223 |
| கருடக்கொடி | 418 |
| கருவாயுலகினுக்கு | 228 |
| கலந்துநின் | 485 |
| கல்லாதபுல் | 478 |
| கல்லாமனத்து | 179 |
| களிவந்த | 119 |
| கள்வன் | 233 |
| கறங்கோலை | 242 |
| கற்போலும் | 318 |
| கற்றறியேன் | 550 |
| கனவேயு | 244 |
| கன்னாருரி | 243 |
| காசணி | 198 |
| காட்டகத்து | 630 |
| காணலாம் | 048 |
| காணும் | 633 |
| காணும்அது | 603 |
| காணுமாறு | 088 |
| காதார் | 168 |
| காப்பாய் | 447 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன் உடலுயிர் 325
காருடைப் 356
காருறு கண் 107
காலமுண்டாகவே 530
கானார்புலி 266
கிஞ்சுகவாய் 362
கிளியனார் 519
கிளிவந்த 192
கிற்றவா 038
கீதம் இனிய 348
குதுகுது 138
குலங்களை 133
குலம்பாடிக் 254
குழைத்தாற் 496
குறியும்நெறி 562
குறைவிலா 392
கூடிக்கூடி 495
கூவின 370
கூறும்நாவே 500
கூற்றைவென் 535
கெடுவேன் 646
கேட்டாயோ 180
கேட்டாரு 032
கையார் 187
கையால் 425
கொந்தணவும் 357
கொம்பரில் 124
கொம்பில் 564
கொம்மை 568
கொழுமண 131
கொள்ளு 050
கொள்ளேர் 106
கொள்ளேன் 006
கொன்றை 347
கோணிலா 525
கோயில்சுடு 257
கோலமேனிவ 472
கோலவரை 336
கோலாலமாகி 262
கோவே 648
கோழிசிலம்ப 162
கோற்றேன் 364
கோற்றேன்என 513
சங்கம்அரற்றச் 208
சங்கரா 069
சங்கு 642
சச்சையனே 135
சடையானே 557
சட்டோநினை 221
சதுரை 527
சந்திரனை 189
சலமுடைய 272
சாடியவேள்வி 299
சாதல் 657
சாதிகுலம் 479
சாவமுன்னாள் 008
சித்தமேபுகு 584
சிந்தனை 030
சிந்தை 083
சிரிப்பார் 386
சிரிப்பிப்பன் 153
சீரார்திருவடி 292
சீரார்பவளங் 329
சீலமின்றி 645
சீவார்ந்தீ 420
சுடர்பொற் 438
சுந்தரத் 352
சுந்தரநீற்றணி 197
சுருள்புரி 412
சூடகந்தோள்வளை 201
சூடுவேன் 191
சூரியனார் 309



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணவன் 171
செங்கண் 175
செடியாராக்கை 426
செத்திடமும் 659
செப்பார் 185
செம்மை 658
செய்தபிழை 619
செய்யவாய் 361
செய்வதறியா 056
செல்வம்நல் 082
செழிகின்ற 109
செழுக்கமல 408
செறியும்இப் 578
செறியும்பிற 529
சேரக்கருதி 613
சொல்லிய 641
சோதியாய் 396
சோதியே 458
சோலைப்பசுங் 367
ஞாலம் இந்திரன் 406
ஞானக்கரும்பின் 209
ஞானவாள் 615
தகைவிலா 522
தக்கனார் 310
தக்கனையும் 259
தச்சுவிடுத்தலுந் 297
தந்ததுன் 397
தரிக்கிலேன் 065
தவமே 009
தறிசெறி 523
தனித்துணை 143
தனியனேன் 031
தன்மை 063
தாதாடு 360
தாதாய்மூவே 446
தாமே 607
தாயாய் 647
தாரகை 152
தாராய் 091
தாரா அருளொன் 493
தாளியறுகினர் 345
தானந்தம் 264
திகழத்திகழு 442
திண்போர் 290
திருந்துவார் 467
திருமாலும் 235
திருவார் 236
தில்லைமூதூர் 002
தினைத்தனை 217
தீதில்லை 321
தீர்க்கின்ற 112
தீர்ந்தஅன்பாய 073
துடிகொள் 462
துடியேர்இடு 560
துணியாஉருகா 492
துண்டப்பிறை 183
துப்பனே 463
தூவெள்ளை 597
தெங்குலவு 337
தென்பால் 263
தேரைநிறுத்தி 313
தேவதேவன் 579
தேவர்கோ 034
தேனகமாமலர் 211
தேனாடுகொன்றை 279
தேனைப்பாலை 062
தேன்பழச் 351
தேன்புக்க 268
தையலார் 656
தையலோர் 346
தொண்டர்காள் 616
தோலுந்துகிலும் 232




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| நங்காயிதென்ன | 265 | நெடுந்தகை | 116 |
| நங்கைமீர்எனை | 581 | நெறிசெய் | 282 |
| நஞ்சமர் | 332 | நெறியல்லா | 651 |
| நடித்து | 571 | நோயுற்று | 224 |
| நண்ணிப் | 632 | பங்கயமாயிரம் | 324 |
| நமச்சிவாய | 001 | பச்சைத்தால் | 549 |
| நரியை | 649 | பஞ்சாய | 551 |
| நல்கா | 387 | பஞ்சாயஅடி | 654 |
| நல்லமலரின்மேல் | 312 | பஞ்சின்மெல் | 453 |
| நன்றாக | 270 | படமாக | 288 |
| நாடகத்தால் | 015 | படியதனில் | 660 |
| நாதமுடைய | 595 | பணிவார் | 093 |
| நாமகள்நாசி | 307 | பண்சுமந்த | 182 |
| நாயிற்கடைப் | 277 | பண்டாய | 628 |
| நாயிற்கடையாம் | 503 | பண்ணார்ந்த | 547 |
| நாயேனை | 226 | பண்ணினேர் | 452 |
| நானாரடி | 507 | பண்பட்ட | 278 |
| நானாரேன் | 216 | பத்தர்சூழப் | 582 |
| நானுமென் | 229 | பத்திமையும் | 481 |
| நானேயோ | 555 | பத்திலனே | 602 |
| நான்தனக் | 227 | பந்தணைவிரலாள் | 455 |
| நான்மறை | 308 | பந்தவிகார | 637 |
| நான்முகன் | 004 | பப்பற | 373 |
| நித்தமணாளர் | 340 | பரந்துபல் | 010 |
| நிருத்தனே | 459 | பரம்பரனே | 139 |
| நிலம்நீர் | 319 | பரவுவா | 021 |
| நினைப்பதா | 080 | பரவுவாரவர் | 432 |
| நினையப்பிறருக் | 444 | பரிதிவாழ் | 454 |
| நிற்பார் | 611 | பரிந்துவந்து | 443 |
| நீக்கிமுன் | 435 | பருவரை | 526 |
| நீண்டகரத்தர் | 342 | பவனெம் | 013 |
| நீண்டமாலும் | 440 | பழிப்பில்நின் | 151 |
| நீதியாவன | 429 | பழுதில்தொல் | 457 |
| நீரின்ப | 528 | பற்றாங்கவை | 510 |
| நீலஉருவிற் | 350 | பன்னாட்பரவி | 283 |
| நெக்குநெக்குள் | 445 | பாங்கினொடு | 483 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம்பரஞ் 156
பாசவேரற 542
பாடவேண்டும் 104
பாடிமால்புகழும் 450
பாடிற்றி 149
பாதாளம் 164
பாதியெனு 661
பாரார்விசும்பு 176
பாருருவாய 599
பாரொடு 448
பாரோர் 424
பார்பதம் 395
பார்பாடும் 247
பார்ப்பதி 302
பாலகனார்க்கு 311
பாலும்அமுதமும் 285
பால்நினைந் 544
பாவநாசா 456
பாழ்ச்செய் 567
பாற்றிரு 604
பிட்டுநேர்பட 469
பிணக்கிலாத 468
பிணியெலாம் 520
பித்தன்என்றெனை 431
பித்தென்னை 622
பிரமனரியென் 326
பிறவிஎன்னும் 585
பிறவிதனை 480
பிறிவறியா 416
புகவேதகேனுனக் 014
புகவேவேண்டா 606
புகழ்மின் 610
புகுவதா 040
புகுவேன் 064
புணர்ப்ப 075
புத்தன்புரந்தரா 250
புத்தன்முதலாய 320
புரந்தரனார் 303
புரள்வார் 614
புலன்கள் 132
புலையனேனையும் 400
புவனியிற் 377
புழுவினாற் 586
புறமே 090
புற்றில்வாள் 516
புற்றுமாய் 399
புன்புலால் 545
பூங்கமல 556
பூசுவதும் 255
பூணொணாத 471
பூதங்கள் ஐந்தாகி 484
பூதங்கள்தோறும் 372
பூத்தாரும் 315
பூமேல் அயனோடு 234
பூவலர் 596
பூவார் 605
பூவியல் 196
பூவேறு 215
பெருநீரற 130
பெருமான் 612
பெரும்பெரு 410
பெற்றது 127
பெற்றிபிறர்க்கு 194
பேசப்பட்டேன் 086
பேசில்தாம் 028
பேசும் 634
பேதமில்ல 473
பேராசை 284
பேருங்குணமும் 563
பைங்குவளைக் 167
பைந்நாப்பட 506
பொச்சை 577
பொதும்புறு 140
பொத்தை 434
பொய்யவ 111
பொய்யனேன் 398



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாய 231
பொய்யெல்லாம் 652
பொருட்பற்றிச் 317
பொருத்த 097
பொருந்து 572
பொருளே 121
பொலிகின்ற 114
பொழிகின்ற 411
பொன்னிய 640
போகம் 076
போதுசேரயன் 405
போரேறே 057
போற்றிஅருளுக 174
போற்றியிப் 074
போற்றியென் 067
போற்றியென்வாழ் 368
போற்றியென்றும் 049
போற்றியோம் 066
மஞ்சுலாம் 524
மடங்என் 123
மண்ணதனிற் 653
மண்ணினில் 639
மதிக்கும் 565
மத்துறு 134
மருவினிய 554
மருளனேன் 466
மலங்கினேன் 470
மலைமகளை 261
மலையரையன் 267
மறுத்த 110
மன்னவனே 147
மன்னஎம்பிரான் 103
மாடுஞ்சுற்றமு 573
மாடுநகை 205
மாதாடு 334
மாதிவர் 589
மாயவன 532
மாயவாழ்க்கை 583
மாயனே 404
மாலயன் 590
மாலறியா 159
மாலேபிரமனே 248
மாவடுவகிர 415
மாவார 294
மாழைமை 413
மாறிநின்றெனை 037
மாறிநின்றென் 388
மாறிலாத 095
மாறுபட்ட 115
மானம் அழிந்தோம் 322
மானேநீ 160
மானேர் நோக்கி 499
மானேர் நோக்கிஉமை 059
மானேர் நோக்கியுமை 089
மானோர்பங்கா 494
மிடைந்தெ 421
மின்கணினார் 414
மின்னிடை 207
மின்னேரனைய 643
முடித்த 061
முதலைச்செவ் 145
முத்தணி 204
முத்தனே 465
முத்தனை 588
முத்தன்ன 157
முத்திக்குழன்று 246
முத்திநெறி 650
முத்துநற்றாம 195
முந்தியமுதல் 375
முழுதயில் 148



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதலே 381
முழுவதுங் 011
முன்னாய 291
முன்னானை 193
முன்னிக் 170
முன்னின்று 379
முன்னீறும் 331
முன்னைப் 163
முன்னையென்னுடை 430
முன்னைவினை 620
மூத்தானே 533
மூவரும் 625
மூன்றங் 330
மெய்தான் 005
மெய்யனே 464
மேலை 047
மேவும்உடன்றன் 489
மைப்பொலியுங் 186
மையமர் 206
மையலாய 569
மையிலங் 096
மொய்ப்பால் 419
மொய்யார் 165
யாவர்க்கும் 624
யானேதும் 016
யானேபொய் 094
வட்டமலர் 213
வணங்க 281
வணங்கும்நின் 079
வணங்குமிப் 574
வண்ணம் 029
வந்திமை 593
வம்பனாய்த் 587
வம்பனேன் 449
வருந்துவன் 017
வலைத்தலை 144
வல்லைவாள 451
வழங்குகின்ற 417
வளர்கின்ற 108
வளைந்தது 295
வன்புலால் 518
வன்னெஞ்ச 225
வா இங்கே 355
வாராவழி 623
வாழ்கின்றாய் 024
வாழ்த்துவது 020
வாழ்ந்தார் 631
வாளுலாம் 521
வாள்தடங் 202
வானநாடரும் 099
வானவன் 286
வானாகி 019
வான்கெட்டு 252
வான்பாவிய 515
வான்வந்த 178
விச்ச 100
விச்சு 085
விச்சைதா 033
விடுமின் 609
விடைவிடா 537
விண்ணக 376
விண்ணாளும் 184
விண்ணோர் 253
விரவிய 534
வினைக்கேடரும் 509
வினைப்பிறவி 476
வினையிலே 026
வினையென் 041
வெஞ்சின 304
வெஞ்சேலனைய 427
வெந்துவிழும் 655
வெய்யவன் 301
வெய்யவினை 617
வெருவரேன் 517
வெள்ளத்துள் 118
வெள்ளந் 025
வெள்ளைக் 344
வெறுப்பன 409


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடுருவாகி 592
வேண்டத்தக்க 501
வேண்டும்நின் 078
வேண்டும் வேண்டும் 488
வேண்டேன் 512
வேதமும் 214
வேதமொழியர் 338
வேவ 594
வேனில்வேள்கணை 044
வேனில்வேள்மலர் 023
வைத்தநிதி 220
வைப்புமாடு 428
வையகம் 203

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

12/21.5.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org